உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருவேட்டக்குடிப் புராண வசனம்.

வெகுதானியஹு மாசிமீ

1939.

ஸ்ரீ பிரஹதம்பாள் அச்சுக்கூடம்,

தேவகோட்டை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சாந்தநாயகி அம்பாள் ஸமேத

திருமேனிஅழகர் துணை.

திருவேட்டக்குடிப் புராண வசனம்.

இது

யாழ்ப்பாணம்

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலசந்தானம்,

திருநெல்வேலி

ஸ்ரீலஸ்ரீ. அம்பலவாண நாவல சுவாமிகள்

மாணாக்கரும்,

மணிவாசக ஞானசம்பந்த சபை ஸ்தாபித்து

நடத்தி வருபவருமாகிய

பா. சிதம்பரநாத பிள்ளை அவர்கள்

இயற்றியது.

திருவேட்டக்குடிச் சிவாலய பரிபாலகர்

தேவகோட்டை ஸ்ரீமாந். மெ. லெ. ராம.

இலக்குமணச்செட்டியாரவர்களால்

தேவகோட்டை

ஸ்ரீ பிரஹதம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

வெகுதானியஹு மாசிமீ

1939.

உ

சிவமயம்

திருமேனிஅழகர் துணை.

படல அட்டவணை.

படலம்.		பக்கம்.
௧.	தேவாரப்பதிகம் முதலியன	௧
௨.	தேவார அருஞ்சொற் குறிப்புரை ...	௨௬
௩.	கடவுள் வாழ்த்து	௧
௪.	கடவுள் வாழ்த்து அருஞ்சொற் குறிப்புரை ...	௩௫
௫.	நைமிசாரண்யப் படலம்	௬
௬.	அம்மை தவஞ்செய் படலம்	௮
௭.	தேவர் பூசைசெய் படலம்	௰௩
௮.	அருச்சுனன் பாசுபதம்பெற்ற படலம் ...	௰௭
௯.	அனவரதன் தரிசனஞ்செய் படலம் ...	௨௰
௰.	தீர்த்த விசேடப் படலம்	௨௫
௰௧.	ஞானசம்பந்தப் படலம்	௨௬

உ

சிவமயம்.



திருவேட்டக்குடி, சிவாலயத்திருப்பணியாளர்

தேவகோட்டை,

ராம. மெ. இலக்குமணஞ்செட்டியாரவர்கள்.

திருப்பணி ஆண்டு 1892.

சிவமயம்.

முகவுரை.

திருவேட்டக்குடி, சோழநாட்டிலேயுள்ள ஒரு சிவக்ஷேத்திரம். இதற்கு திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருத்தாண்டகமொன்றும், இன்னும் சில ஆன்றோர் திருவாக்குக்களாகிய திருமுறைகளும் பாடப்பெற்றுள்ளன. வடமொழியிலுள்ள இந்த க்ஷேத்திர மான்மியத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் புராணமாய்ப் பாடியதை அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறது.

இப்புராணம் பாடியவர்கள் திருக்கைலாயபரம்பரை திருவாவடுதுறை ஆதீன மஹாவித்துவான் திரிசிரபுரம், மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் மாணாக்கர் தில்லைவிடங்கன் வெண்பாப்புலி சு. வேலுச்சாமி பிள்ளையவர்களாகும். ஷை புராணத்தை வசனமாய்ச் செய்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண நாவல சுவாமிகள் மாணாக்கர் திருநெல்வேலி பா. சிதம்பரநாத பிள்ளையவர்களாகும்.

இப்புராண மான்மியத்திலே உள்ளன, கடவுள் வாழ்த்து, திருநாட்டுப்படலம், திருநகரப் படலம், நைமிசாரண்யப் படலம், புராணவரலாற்றுப் படலம், அம்மை தவஞ்செய் படலம், தேவர் பூசைசெய் படலம், அருச்சுனன் பாசுபதம் பெற்ற படலம் அனவரதன் தரிசனஞ்செய் படலம், தீர்த்தவிசேடப் படலம் ஞானசம்பந்தப் படலம் என்பனவாம்.

இப்புராணத்தை அழகிய செந்தமிழ்ப்பாக்களால், சொன்னயம், பொருணயம், தொடைநயம், அலங்காரநயம் முதலிய நன்னயங்கள் பல பொதிந்து சைவசித்தாந்தக் கருத்துக்களும் ஆங்காங்கு விளங்கும்படி செய்து உபகரித்த திருவாளர் சு. வேலுச்சாமி பிள்ளை அவர்களுக்கும், ஷை புராணத்தை ஆராய்ச்சி செய்து தேவாரப் பதிக அருஞ்சொற் குறிப்புரையும், கடவுள் வாழ்த்து அருஞ்சொற் குறிப்புரையும் செய்து சேர்த்து அநேக-

பிரமாண வாக்கியங்களுடன் யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி செந்தமிழ் இனிய வசன நடையில் செய்து உபகரித்த திருவாளர் பா. சிதம்பரநாத பிள்ளை யவர்களுக்கும், இப்புராணச் செய்யுள்களுக்கு அருஞ்சொற் குறிப்புரை செய்து உபகரித்த காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்தரக் கலாசாலைத் தமிழாசிரியரும், மெய்கண்டார் கழகத் தமிழ் தேவைத் தலைவருமாகிய திருவாளர் வீ. திருஞானசம்பந்த முதலியார் அவர்களுக்கும், இப்புராணம், வசன நூல்களை ஆதரித்துப் போற்றிக் கற்றல் கேட்டலுடைய பெரியார்களுக்கும் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய ஸ்ரீ சாந்தநாயகி அம்பாள் ஸமேத திருமேனி அழகர் திருவருள் புரிவாராக.

இப் புஸ்தகத்திலுள்ள திரு உருவப்படத்தில் விளங்குகின்ற எனது பிதாமகர் சிவநேசச் செல்வர் ராம. மே. இலக்குமணச் செட்டியாரவர்கள். சோழவளநாட்டிலே யுள்ள சிவஸ்தல யாத்திரை செய்து வருங்காலத்து இத்திருவேட்டக்குடியில் வந்து, தரிசனஞ் செய்தார்கள். அவர்கள் தரிசனஞ்செய்யுங் காலத்து இச் சிவாலயம் மிகக் கிலமாயிருந்தது. அப்போது அவ்வூரவர்களும், யாழ்ப்பாணம் நைட்டிகப்பிரமசாரியாகிய க. வேலுப்பிள்ளை யவர்களும் ஆலயவிஷயமாய்ச் செட்டியாரவர்களைத் தூண்டுதல் செய்து முயற்சிக்க, செட்டியாரவர்களும் திருமேனி அழகர் திருவருளை நினைந்து வியந்து சிவகாரியத்தில் பக்திபரவசர்களாயிருந்து ஈடுபட்டு வந்தார்கள். அங்ஙனம் ஈடுபட்டு வந்த அவர்களாலும், அவர்கள் பரம்பரையில் வந்த எனது தகப்பனார் இராமனுதச் செட்டியாரவர்களாலும், சிறிய தகப்பனார் முத்தைய செட்டியாரவர்களாலும், என்னாலும் செய்யப்பட்டு வந்தனவும், வருகின்றனவுமாகிய சிவ தர்ம திருப்பணிகளாவன:- சுவாமி கோயில் கெர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், முன் மண்டபம், கல்யாண மண்டபம், அம்மன் கோயில் பரிவார மண்டபங்கள், திருக்கூபம், நான்கு திருமதில்கள், ராஜகோபுரம் முதலியனவாகும். இவைகளை யெல்லாம் திருப்பணி செய்து முடித்து, சுவாமி

அம்பாளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும், மஹா கும்பாபிஷேகமும் செய்து முடித்திருக்கிறது. இன்னும் தடாகப் பிரதிட்டை, பசுமடம், நந்தனவனம் திருவீதி முதலியனவும், உண்டுபண்ணி வைத்து சுவாமிக்கு நித்திய பூசை நாலுகாலமும், மாதாந்த விசேட பூசைகளும் நிகழ்ந்து வரும்படி செய்திருக்கிறது. மாசி மாசம் வருகிற மகத் திருவிழா புராணத்திற்கண்ட ஐதிகப்படி வருஷந்தோறும் நடைபெற்று வருகின்றது.

இப்போது நான் திருமேனிஅழகர் திருவருளை முற்கொண்டும், எனது முன்னோர்கள் செய்துவந்த புண்ணியவசத்தாலும் அவர்கள் ஸ்தாபித்துப் பரிபாலனம் செய்துவந்த சிவ தர்மங்களை நடத்தி வருகின்றேன்.

இதற்கு இவ்வூர் மிராசுதார்களும், வெகு ஜனங்களும், சுவாமிக்கு விசேட உபயங்கள் செய்து வருகின்ற அன்பர்களும், பக்க ஊர்களிலுள்ள சிவ பக்தர்களும், மிக்க அன்புடையவர்களாய்த் துணை செய்து வருகின்றார்கள்.

இவ்வுத்தம சிலர்களுக்கு எல்லா நலங்களும் உண்டாகும்படி ஸ்ரீ சாந்தநாயகி அம்பாள் ஸமேத திருமேனிஅழகர் திருவருள் புரிவாராக.

இத் திருவேட்டக்குடி என்னும் ஸ்தலம் சுவாமி தரிசனஞ் செய்ய வருபவர்களுக்கும், வசிப்பவர்களுக்கும் மிக வசதியான இடம். கடற்கரைப் பக்கமாயுள்ளது. சோலை வளங்கள் செறிந்தது. நல்ல தண்ணீர் வசதி யுள்ளது. நெய், பால், தயிர், காய்கறி, அரிசி சாமான்கள் நயமாய்க் கிடைக்கக்கூடிய இடமாகும்.

க்ஷேத்திரத்துக்குச் செல்லும் வழி:—

S. I. R. பேரளம், காரைக்கால் லயனில், காரைக்கோயில் பத்து என்னும் ஸ்டேஷனிலிருந்து, கப்பிரோட்டு நாலு மைல் தூரத்திலுள்ளது வரிச்சுகுடி. அதிலிருந்து கிழக்குப்பக்கம் மண் ரோட்டில் அரைமைல் தூரத்தில் திருவேட்டக்குடி யிருக்கிறது.

S. I. R. மாயவரம் தரங்கம்பாடி லயனில் தரங்கம்பாடி ஸ்டேஷனிலிருந்து கப்பி ரோடு 3-மைலிலுள்ளது வரிச்சுகுடி. இவ்வழியாகவும் வரலாம்.

இந்த க்ஷேத்திரம் பிரஞ்சு இந்தியாவில் இருப்பதால் பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வருபவர்கள் தீர்வைச் சாமானிருந்தால் அதை தீர்வை ஆபீஸில் காண்பித்துப் பிரீப்பாஸ் வாங்கி வரவேண்டும். வாங்காவிடில் திரும்பும்பொழுது தீர்வை வசூலிப்பார்கள்.

எல்லா மெய்யன்பர்களும் இந்த க்ஷேத்திரத்துக்கு வந்து தரிசித்துத் தொண்டுசெய்து இம்மை, மறுமைப்பயன்களைப் பெற்றுச் சுகவாழ்வாக வாழவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். சுபம்!

இங்ஙனம்,

திருவேட்டக்குடிச் சிவாலய பரிபாலகர்,

மெ. லெ. ராம. இலக்குமணச்செட்டியார்.

தேவகோட்டை.

உ

கணபதி துணை.

மதிப்புரை.

திருவாளர் தேவகோட்டைத் திருப்பணிச் செல்வராகிய ராம. மெ. இலக்குமணச் செட்டியாரவர்களாலும், அவர்கள் வழித் தோன்றலாகிய பௌத்திரர் மெ. லெ. ராம. இலக்குமணச் செட்டியாரவர்களாலும், திருப்பணி, நித்திய நைமித்திகங்களாகிய பூசை திருவிழாக்கள் செய்து பரிபாலித்து வரும் சோழவள நாட்டிலே திருஞானசம்பந்த சுவாமிகளாலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற திருவேட்டக்குடி ஸ்தலபுராணச் செய்யுளை,

ஸ்ரீமந்-மணிவாசக ஞானசம்பந்த சபையை ஸ்தாபித்து நடத்திவரும் தமிழ் வித்துவான், திருநெல்வேலி, மகா-௱-௱-ஸ்ரீ பா. சிதம்பரநாதபிள்ளை அவர்களால் இனிய செந்தமிழ் நடையில் இயற்றப்பெற்ற வசன நூலைக் கற்றோரும் மற்றோரும் பாராயணஞ் செய்வதற்கு மன மகிழ்ச்சியைத் தருவதோடு, மிக்க பயனும் தருவதால், அதை யாவரும் பாராயணஞ் செய்து ஸ்ரீ சாந்தநாயகி அம்பாள் ஸமேத திருமேனிஅழகர் திருவருளைப் பெற விரும்புகின்றேன்.

இங்ஙனம்


கரு. கி. க. சொ. சொர்ணநாதஞ் செட்டியார்.

தேவகோட்டை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



திருமேனி அழகர்.　　　　சாந்தநாயகி.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவேட்டக்குடி

தேவாரம் ௩-ஆம் திருமுறை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்-பண்-பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வண்டிரைக்கும் மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவம்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கனைகழல்கள் [பவளம்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச் சுடர்ப்
தெண்டிரைக்கள் கொணர்ந்தெரியும் திருவேட்டக் குடியாரே. ௧

பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்கும்
காசினியிற் கொணர்ந்தட்டும் கைதல்சூழ் கழிக்கானல்
போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகார்
தீயெரிகை மகிழ்ந்தாரும் திருவேட்டக் குடியாரே. ௨

தோத்திரமா மணலிலிங்கம் தொடங்கியவா னிரையிற்பால்
பாத்திரமா ஆட்டுதலும் பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறைநால்வர்க் கறம்புரிநூ லன்றுரைத்த
தீர்த்தமல்கு சடையாரும் திருவேட்டக் குடியாரே. ௩

கலவஞ்சேர் கழிக்கானல் கதிர்முத்தம் கலந்தெங்கும்
அலவஞ்சேர் அணைவாரிக் கொணர்ந்தெறியு மகன்றுறைவாய்
நிலவஞ்சேர் நுண்ணிடைய நேரிழையா ளவளோடும்
திலகஞ்சேர் நெற்றியினார் திருவேட்டக் குடியாரே. ௪

பங்கமார் கடலலறப் பருவரையோ டரவுழலச்
செங்கண்மால் கடையஎழு நஞ்சருந்துஞ் சிவமூர்த்தி
அங்கநான் மறைநால்வர்க் கறம்பொருளின் பயனளித்த
திங்கள்சேர் சடையாரும் திருவேட்டக் குடியாரே. ௫

நாவாய பிறைச்சென்னி நலந்திகழும் இலங்கிப்பி
கோவாத நித்திலங்கள் கொணர்ந்தெறியுங் குளிர்கானல்

ஏவாரும் வெஞ்சிலையால் எயின்மூன்றும் எரிசெய்த
தேவாதி தேவனர் திருவேட்டக் குடியாரே. ௬

பானிலவும் பங்கயத்துப் பைங்கானல் வெண்குருகு
கானிலவு மலர்ப்பொய்கைக் கைதல்சூழ் கழிக்கானல்
மானின்விழி மலைமகளோ டொருபாகம் பிரிவரியார்
தேனிலவு மலர்ச்சோலைத் திருவேட்டக் குடியாரே. ௭

துறையுலவு கடலோதம் சுரிசங்கம் இடறிப்போய்
நறையுலவும் பொழிற்புன்னை நன்னீழற் கீழமரும்
இறைபயிலும் இராவணன்றன் தலைபத்தும் இருபதுதோள்
திறலழிய அடர்த்தாரும் திருவேட்டக் குடியாரே. ௮

அருமறைநான் முகத்தானும் அகலிடநீர் ஏற்றானும்
இருவருமாய் அளப்பரிய எரியுருவாய் நீண்டபிரான்
வருபுனலின் மணியுந்தி மறிதிரையார் சுடர்ப்பவளத்
திருவுருவில் வெண்ணீற்றார் திருவேட்டக் குடியாரே. ௯

இகழ்ந்துரைக்கும் சமணர்களும் இடும்போர்வைச் சாக்கியரும்
புகழ்ந்துரையாப் பாவிகள்சொல் கொள்ளேல்மின் பொருளென்ன
நிகழ்திலங்கு வெண்மணலின் நிறைத்தண்டப் பிறைக்கற்றை
திகழ்ந்திலங்கு செஞ்சடையார் திருவேட்டக் குடியாரே. ௧௦

தெண்டிரைசேர் வயலுடுத்த திருவேட்டக் குடியாரைத்
தண்டலைசூழ் கலிக்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்டமிழ்நூல் இவைபத்தும் உணர்ந்தேத்த வல்லார்போய்
உண்டுடுப்பில் வானவரோ டுயர்வானத் திருப்பாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனர்-தேவாரம். ௬-ஆம் திருமுறை

அடைவு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நற்கொடிமேல் விடையுயர்த்த நம்பன்செம்பங்
குடிநல்லக் குடிநளிநாட் டியத்தான்குடி
கற்குடிதென் களக்குடிசெங் காட்டங்குடி
கருந்திட்டைக் குடிகடையக் குடிகாணுங்கால்

விற்குடிவேள் விக்குடிநல் வேட்டக்குடி
வேதிகுடி மாணிகுடி விடைவாய்க்குடி
புற்குடிமா குடிதேவன் குடிநீலக்குடி
புதுக்குடியும் போற்றஇடர் போகுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளிய
சிவதலத் திருவெண்பா, கக-ஆம் திருமுறை.

திருச்சிற்லம்பலம்.

குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே—மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை அங்காந் திருந்து.

திருக்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

தெய்வச் செந்தமிழ்ச் சேக்கிழார் நாயனர் அருளிச்செய்த
பெரிய புராணம் கஉ-ஆம் திருமுறை.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் புராணம்.

திருத்சிற்றம்பலம்

அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக்
குடி பணிந்தங் கலைவாய்ப் போகிக்
கடிகமழு மலர்ப்பழனக் கழனிநாட்
டகன்பதிகள் கலந்து நீங்கிக்
கொடிமதில்சூழ் தருமபுரம் குறுகினர்
குண்டர்சாக் கியர்தங் கொள்கை
படியறியப் பழுதென்றே மொழிந்துய்யும்
நெறிகாட்டும் பவள வாயர். சசரு

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவேட்டக்குடிப் புராணம்.

கடவுள் வாழ்த்து.

விநாயகர்

திருவி னாயகன் செய்வழி பாட்டினன்
உருவி னாயகன் சொல்லினன் குற்றிடுங்
கருவி னாயகன் மத்தினைக் காய்ந்தருள்
ஒருவி நாயகன் ஒண்கழ லேத்துவாம். ௧

திருமேனியழகர்.

உருமேனி பலவகையென் றுரைத்திடினு மறிவுறலாற்
கருமேனி யுடையரென்றுங் கனகம்பால் செம்பவளந்
தருமேனி யுடையரென்றுஞ் சாற்றருள்கூ ருருவருவாந்
திருமேனி யழகர்தாள் சிந்தனைசெய் தேத்துவாம். ௨

சாந்தநாயகியம்மை.

சாந்த நாயகர் தன்மைநேர் வாணிமா
சாந்த நாயகி தாழ்குழற் கிட்டுனுஞ்
சாந்த நாயகர் தம்புய மேலணி
சாந்த நாயகி தாண்மலர் போற்றுவாம். ௩

சங்குவளைக் கரத்தாளைச் சராசரமெ
  லாமீன்ற தாயை நீரிற்
றங்குவளைச் செவியாளைச் சைவலமாங்
  குழலாளைத் தாழ்வி லாளைப்
பொங்குவளைப் புயத்தாளைப் பொருப்பரையன்
  அளித்தருளும் புதல்வி தன்னை
அங்குவளை விழியாளை அரனிடத்தில்
  அமர்வாளை அன்பிற் றாழ்வாம். ௪

கடவுள் வாழ்த்து.

நடராசர்.

நிலம்பூத்த வயனரியு நெடுவிசும்பு
ளாருமெதிர் நின்று வாழ்த்தப்
பொலம்பூத்த மணிமன்றுட் புலிமுனியும்
பதஞ்சலியும் புகழ்ந்து போற்ற
வலம்பூத்த தொழிலைந்து மலர்க்கைகழன்
மூன்றிரண்டில் வயங்கிக் காட்ட
நலம்பூத்த வுமைகாண நடம்புரியும்
வரதன்றாள் நயந்து வாழ்வாம். ரு

சிவகாமியம்மை.

துங்கமலர் தூயடியார் தொழுதேத்துந்
தொல்புலியூர்ச் சுவண மன்றிற்
பங்கமலப் பற்றகன்ற பணிபுலிமா
முனிவரரும் பணிந்து போற்ற
அங்கமல விறைவனவி லானந்தத்
தனிநடன மருள்கூர்ந் தென்றுஞ்
செங்கமலக் கணினோக்குஞ் சிவகாம
சுந்தரிதாள் சிந்தை செய்வாம். சு

தட்சணாமூர்த்தி.

மான்முத லமர ரெல்லாம் வழுத்திடு மொருத்தன் மேலாம்
வான்முதற் பூத மானோன் மன்சன காதி யற்கோர்
தான்முத லுயிர்மா பந்தந் தனைத்தெரித் தருள்வான் முன்கல்
லான்முத லமர்ந்த பெம்மான் அடிமலர் முடிமேல் வைப்பாம். எ

வயிரவர்.

நெஞ்சுக மலர்த்தாள் வைத்தாள் நீர்மைய வாணி கேள்வன்
அஞ்சுகந் தனிலொன் றங்கை யகம்வைத்தோன் குறளாய் வந்து
மஞ்சுக மேன்மே லோங்கும் வாமன னந்நாள் தந்த
கஞ்சுகந் தரித்த மெய்யன் கழலிணை அகத்துள் வைப்பாம். அ

விநாயகர்.

மாத கத்தனைச் செய்யும் வலத்தனை
பாத கத்தனை யாண்ட பரனைக்கைம்
மோத கத்தனைமுண்டக நேத்திரப்
போத கத்தனைப் போற்றி வணங்குவாம். ௯

சுப்பிரமணியர்.

அயிலாருங் கரத்தானை அமரர்சிறை மீட்டானை அரையனல்குங்[ளை
குயிலாரு மொழியாளைக் குஞ்சரியையிலங்கொருபாற்கொண்டவே
மயிலாரு மியலாளை வள்ளிதனை மகிழ்ந்தொருபால் வைத்தகோனை
எயிலாருஞ்சிவதலத்தி லினிதுதரி சித்தன்ப மெய்திவாழ்வாம். ௧௦

திருநந்திதேவர்.

அந்தி வானவ னத்தன் கயிலையின்
முந்தி வானவர் முண்டகத் தாள்தொழ
உந்தி வானவ ருய்தரச் செய்திடும்
நந்தி வானவன் நற்பதம் போற்றுவாம். ௧௧

ஆசிரியரகத்தியனார்.

சூர கத்தியல் கொள்ளிரு வோர்நமன்
தார கத்தியல் தந்தைக் குரைத்தவ
னார கத்தியல் ஐந்துமு ணர்ந்தவன்
சீர கத்தியன் சேவடி யேத்துவாம். ௧௨

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

சித்திரமன் னூர்புகலிச் சிவபாத விருதயர்தம்
புத்திரராய் அவதரித்துப் புவனமெலா முய்தரவே
பத்திரச முறுபதிகம் பலபாடிப் பானருளால்
அத்திரகப் பூவைநல்க அருள்குரவர் சரண்பணிவாம். ௧௩

திருநாவுக்கரசு நாயனார்.

பெருநாவ லோர்போற்றும் பெருந்தகையைக் கொடுமமணர்
கருநாவாய் செலுங்கடலிற் கலில்யாத்துத் தளப்பரமன்
ஒருநாமந் தனையோதி உயர்கரையி லிவர்ந்துவந்த
திருநாவுக்கரசுதனைச் சிந்தனைசெய் தேத்திடுவாம். ௧௪

சுந்தரமூர்த்தி நாயனார்.

மாதுந்து பியினுத மலிகமலை யாம்பதியிற்
சூதுந்துன் னரியமூலைத் துணைக்குறழா வாம்பலெனும்
போதுந்துப் பிதழ்க்கொவ்வாப் பூவைவயிற் றேவைமுனம்
தூதுந்தும் வன்றொண்டர் துணையின்மலர்த் தாள்பணிவாம். கரு

மாணிக்கவாசக சுவாமிகள்.

ஆணிக்க னகமன்றில் அனவாத நடம்புரியும்
வேணிக்கம் வைத்தபிரான் விழைந்துவர சகங்கோவை
பாணிக்க ணெழுத்தாணி பற்றிவரைந் திடநவிலும்
மாணிக்க வாசகர்தம் மலரடிகள் வணங்கிடுவாம். கசு

சண்டேச நாயனார்.

தந்தை தனக்குக் கதியளிப்பான்
தனைய னென்ப தனைத்தெரிப்பான்
நிந்தை தனக்கு முதல்வனு
நின்றான் றனக்குங் கதியளித்தே
எந்தை தனக்குப் பூசைசெய்வோர்
இயற்றர்ச் சனைகொ ளிறைவன்றான்
சிந்தை தனக்குத் தூய்மையுறச்
சிந்தித் தேத்திப் பணிதுவாம். கஎ

அறுபத்துமூன்று நாயன்மார்.

மன்ப தித்திறம் வாய்ந்தவ ரன்பர்தொண்
டென்ப திற்சிறி தேனும் வழுவிலர்
அன்ப திற்சிறந் தையன் கழலடை
ஒன்ப திற்றெழு வோர்பத முன்னுவாம். கஅ

மற்றை அடியார்கள்.

நீறு கண்டிகை நீடைந் தெழுத்திவை
பேறு நல்கிடும் பெற்றிய தென்றுகொண்
டாறு கொன்றை யணிமுடி நாதன்சீர்
கூறும் அன்பர்தாள் கூரன்பிற் றாழ்குவாம். ககூ

சந்தான குரவர்.

சிவஞானம் அளித்தருளும் மெய்கண்டான்
திருவருள்சேர் சித்தி யார்செய்
சிவஞானம் அளித்தருளும் அருணந்தி
யாசிரியன் சீரார் தெய்வச்
சிவஞானம் அளித்தருளும் மறைஞான
சம்பந்த தேசி ராசான்
சிவஞானம் அளித்தருளும் உமாபதியின்
நால்வர்பதஞ் சிந்தை செய்வாம். ௨0

வழிபடு குரு.

சீர்பூத்த செந்திலவரு கந்தனருள்
குமரகுரு பரனுந் தேர்ந்த
தார்பூத்த பாடியஞ்செய் சிவஞான
முனிவரனுந்தரணி போற்றும்
ஏர்பூத்த ஆறுமுக நாவலனுஞ் சந்தானத்
தெழுந்த எங்கள்
பார்பூத்த அம்பலவ நாவலன்தன்
இணையடியும் பணிந்து வாழ்வாம். ௨௧

சிறப்புப் பாயிரம்.

பாராருந் திருவேட்டக் குடியின்வட
மொழியின்மான் மியத்தைப் பாவால்
தேராருந் தெளிந்துய்யச் செந்தமிழிற்
பாடியதைத் தேவ கோட்டை
ஏராருந் தலப்பணிசெய் இலக்குமணக்
கொடைவள்ளல் இனிது வேண்டச்
சீராரும் நெல்வேலிச் சிதம்பரநா
தன்கதையாய்ச் செய்தான் மன்னோ. ௨௨

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருமேனி அழகர் துணை.

ஸ்ரீ ஞானசம்பந்த சற்குரவே நம:

திருவேட்டக்குடிப் புராண வசனம்.

நைமிசாரண்யப் படலம்.

திருஞானசம்பந்த சற்குரு வணக்கம்.

பரமசமய கோளரியைப் பாலறு வாயனைப்பூம்
பழனம் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத்
தேய மெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளுங்
கவுணியர்தங் குலதீ பத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ
விளங்களிற்றை விரும்பி வாழ்வாம்.
அன்னையாய் எனையீன் றமுதளித் துறுதி
அத்தனாய் அறிவுறுத் தருளி
நன்னயம் புணர்க்குந் துணைவனாய் இன்பம் நல்குநற்
றேழனு மாகிப்
பின்னுநா வல்ல பெருந்தகை யாகிப் பிறங்
கருட் குருசிகா மணியாய்த்
துன்னிநின் றெனையாண் டருள்புரி காழித்
துரைபதந் தொழுதுவாழ்த் திடுவாம்.

பூவுலகத்திலே புண்ணிய ஸ்தானங்கள் பலவற்றுள்ளுஞ் சிறந்துவிளங்குவது நைமிசாரண்ய தபோவனமாகும். அது பல திவ்விய மூலிகைகளும், சோதிவிருக்ஷங்களும், கொடி செடிகளும், தடாகங்களும், சோலைகளும் தன்னுள் நிறைந்துவிளங்குவது.

இவ்விதம் நீர்வளம் நிலவளங்களால் சிறப்புற்றுப் புண்ணிய பூமியாய் விளங்கும் நைமிசாரண்யத்திலே அகஸ்தியர் சத்தி ஆபஸ்தம்பர் சௌனகர் சைமினி கண்ணுவர் சம்பு நாரதர் சத்தகூர்மர் கலைக்கொம்பர் அத்திரி குச்சனர் காசிபர் கர்கி கர்கன் கௌதமர் கௌசிகர் கூர்மாண்டர் துர்வாசர் பிருகு, மதங்கர் முதலிய தபோதனர்களாகிய முனிவர்கள் இருந்தார்கள். அப்போது பதினெண்புராணங்களையும் அன்பர்களுக்கு ஆங்காங்கு உபதேசிக்கும் அருந்தவச் செல்வராகிய சூதமுனிவர் அங்கே வந்தார். அகஸ்தியர் முதலிய முனிவர்கள் அவரைக் கண்டடு இருக்கைவிட்டெழுந்து எதிர்கொண்டு சென்று அழைத்துவந்து ஆசனத்திருத்தி வணங்கித் தோத்திரம் பண்ணுவாராயினர்.

அங்ஙனம் தோத்திரஞ் செய்தபின்னர் முனிபுங்கவரே! உமையம்மையோடு கூடிவிளங்கும் சிவஸ்தலமொன்று கூறவேண்டுமென்று கேட்பாராயினர். சூதமுனிவர் சிவபெருமானைத் தியானித்து வணங்கிக்கொண்டு சொல்லுவாராயினர். தேவலோக வாசிகளுக்கும், நாகலோக வாசிகளுக்கும், வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுகின்ற, பல புண்ணியஸ்தலங்கள் பூலோகத்தி லுள்ளன. அவை காசி காஞ்சி சிதம்பரம் திருவண்ணாமலை திருவாரூர் திருவானைக்கா திருமுல்லைவாயில் திருச்சிராப்பள்ளி திருக்காளத்தி திருவாலவாய் திருநெல்வேலி திருக்குற்றாலம் முதலியனவாகும். தம்மை வணங்கி முழுகுகின்றவர்களுக்கு இஷ்டசித்திகளைக் கொடுப்பனவாகிய கங்கை, காவிரி, காளிந்தி, கோதாவிரி, துங்கபத்திரை, பொன்முகலி, தாமிரவரணி முதலிய பல புண்ணிய நதிகளுமுள்ளன. இம்மகிமை நிறைந்துவிளங்கும் பூலோகத்திலே புண்ணிய பரதகண்டத்திலே

"பூவினிற் கமலம்போலும் புருடரில் திருமால்போலும்
காவினிற் கற்பம்போலுங் கலைகளுள் ஞானம்போலும்
ஆவினிற் சுரர்ஆன்போலும் அறத்துள் இல்லறமே போலும்
நாவினில் மெய்ந்நாப்போலும் நாட்டினில் சோழநாடு"

என்று ஆன்றோர் கூறியவாறு எவ்வகை வளங்களும், சீர் பெற்றோங்கும் சோழநாட்டிலே யுள்ளதும், காந்தமஹாபுராணத்துள் சனற் குமார சங்கிதையில் மூர்த்திமான்மியத்தில் கூறப் பெற்றதும், தன்கீழ்பால் கடற்கரைத் தீர்த்தமும், தென்பால் காரைக்காலென்னும் ஸ்தலமும், மேல்பால் திருமுல்லைக்கான் என்னும் ஸ்தலமும், வடபால் பொன்னிசங்கமமும் இந்நான்கையும் எல்லையாகக்கொண்டு நடுவின்கண் விளங்குவது திருவேட்டக்குடியாகும். புன்னைவனம் விளங்குகின்ற திருவேட்டக்குடியென்னும் இத்திவ்விய ஸ்தலத்திலே ஸ்ரீ சாந்தநாயகி அம்பாள் ஸமேத ஸ்ரீமத் திருமேனிபழகர் என்னும் திருநாமம் கொண்ட சிவலிங்கப் பெருமான் சகல தேவர்கள் முனிவர்கள் அரசர்கள் மனிதர்கள் பூசிப்ப வீற்றிருந்தருளுவர்.

திருச்சிற்றம்பலம்.

அம்மை தவஞ்செய் படலம்.

சௌனகாதி முனிவர்களே! கேளுங்கள், உலக சிருஷ்டியாரம்பத்தில் சிவபிரான் திருமாலைப்படைத்தார். திருமால் பிரமனைப்படைத்தான். பிரமன் சனகாதிமுனிவர்களைப் படைத்தான். அப்படியே உலக சிருஷ்டிகளெல்லாம் படைக்கப்பட்டு வந்தன. அப்போது கைலாசமலையில் சிவபிரான் (*) யோகியாயிருந்தார். அதனால் உயிர்கள் துன்புற்றன. சிவபிரான் யோகத்திலிருந்தமையால் பிரமவிஷ்ணுக்கள் தொழில்கள் நடைபெறவில்லை. அதன்பின் பிரமவிஷ்ணுக்கள் சிவபிரானிடத்து வந்து "எங்கள் தொழில்கள் ஒன்றும்நடைபெறவில்லையே யாதுகாரணம்"? என்று வினவ, உடனே சிவபிரான் போகவடிவத்தை யெடுப்ப, படைப்பு முதலிய தொழில்கள் நடைபெற்று உயிர்கள் துன்பத்தினின்றும் நீங்கி இன்புற்றுப் பெருகியது.

(*) "போகியாயிருந்து யிர்க்குப் போகத்தைப் புரிதலோரார்
யோகியாய் யோகமுத்தி யுதவுதலதுவு மோரார்
வேகியா னற்போற் செய்தவினையினை வீட்டலோரார்
ஊகியா மூடரெல்லாமும்பரி னொருவனென்பர்"
என்பது சிவஞான சித்தியார்.

இங்ஙனம் உயிர்கள் பெருகுங்கால் உமையம்மையார் சிவ பிரானைப்பார்த்து படைப்பு முதலிய தொழில்கள் "யாரிடத்துள் ளன"? என்றாள். சுவாமி "என்னிடத்துள்ளன என்றார்". "உம் மிடத்துள்ளனஎன்றால் சுவாசத்தை அடக்கிடு"மென்றாள். சுவாமி அங்ஙனம் சுவாசத்தைஅடக்கியமாத்திரத்து உயிர்கள் வருத்தமுற் றன. அவ்வருத்தத்தைப்பார்த்து சுவாமி கிருபைகூர்ந்து சுவா சத்தைவிடுப்ப உயிர்கள் சுவாசத்தைபெற்று இன்புற்றார்கள். சிவ பிரான் உமாதேவியைப்பார்த்து "நீ உயிர்களுக்குத் துன்பத்தை விளைத்ததால் நீ திருவேட்டக்குடியிலேசென்று வலையர்குடிசையில் போய்ப்பெண்குழந்தையாகித்தவஞ்செய்வாய் ஆங்கு நாம்வந்து உன்னைமணம்புரிந்து இவண்அழைத்துவருவோ"மென்றுதிருவாய் மலர்ந்தருளினர். பின்பு உலக மாதாவாகிய அம்மையார் சிவபிரா னது சபதத்தையுணர்ந்து ஓர் பெண்மகவாகித் திருவேட்டக்குடி யாகிய புன்னைவனத்தில் வந்தருளினர். வலைஞர்குடியிலுள்ள ஆட வரும், பெண்களும் மிக்க பேரழகினையுடைய இக்குழந்தையைக் கண்டார்கள். கண்டமாத்திரத்தில் ஆச்சரியமடைந்தவர்களாய், இப்பெண்மகவு தெய்வக்குழந்தையோ; அல்லது அரசரது குழந் தையோ என்று எடுத்து மகிழ்ச்சியடைந்தார்கள். அவ்வலைச்சியர் கள்அக்குழந்தை வளர்தற்குரிய சிற்றிலமைத்து, காய்கனி பால் முதலிய உணவுப் பொருள்களைக்கொடுத்து வளர்ப்பாராயினர். யாவரும் கண்டு ஆச்சரியப்படும்படி அக்குழந்தை மதுரமொழி பயின்று அன்னநடை வாய்ந்து வளர்ந்துவந்து ஐந்துவயதுவரை யாயிற்று. முன் மதுரையில் மலயத்துவசபாண்டியன் செய்த மாதவத்தால் தடாதகைப் பிராட்டியாராய் அவதரித்து வளர்ந்து அரசுரிமைச் செங்கோல்செலுத்திய பின்னர் சோமசுந்தரக் கடவு ளாகிய சௌந்தர பாண்டியனை மணந்து உலகத்தை உய்யக் கொண்டருளிய அம்மையார் அக்கடவுளை மணம்புரியும் பொருட் டுப் புன்னைமரநிழலில் சிவபூசைசெய்யத் துணிந்தாள். பூவண்ண மும் பூவின்மணமும்போலச் சர்வலோகமும் வியாபித்து விளங் குஞ் சச்சிதானந்த மூர்த்தியாகிய கடவுளைச் சிவலிங்கத்தில்

ஸ்தாபித்துச் சிவாகம விதிப்படி (†) சிவபூசைசெய்துகொண்டு அங்கே இனிதாக வீற்றிருந்தாள்.

இது இவ்வளவில் நிற்க,

(†) "சிவபூசையாவது :— புட்பம், திருமஞ்சனம் முதலிய உபகரணங்கள்கொண்டு, ஆத்துமசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் பஞ்ச சுத்திகளுஞ் செய்து சிவலிங்கத்தின் பீடத்திலே சத்தியாதி சத்திபரியந்த பதுமமாகிய சிவாசனம் பூசித்து அதன்மேல் இலிங்கத்திலே வித்தியா தேகமாகிய மூர்த்தியை நியாசஞ்செய்து அவ்வித்தியா தேகத்துக்குச் சிவனுயுள்ள நிஷ்கள ரூபரும், ஞானனந்தமயரும், சர்வ கர்த்தாவும், சர்வ வியாபகருமாகும் பரம சிவனுகிய மூர்த்திமானைத் துவாத சாந்தத்தின் மேலே தியானித்து முன்னே நியாசஞ்செய்த வித்தியா தேகத்தில் ஆவாகித்து சுவாமி! "சர்வஜெகத்துக்கும் நாதரே! பூசையின் முடிவு எது வரையுமோ அதுவரையும் நீர் பிரீதியுடன் இவ்விலிங்கத்திலே சாந்நித்தியராய் இரும்" என்று விண்ணப்பஞ்செய்து பூசித்து தோத்திரம், பிரதக்ஷிணம், நமஸ்காரம் பண்ணி முடித்தலாம். இது ஆறுமுகநாவல சுவாமிகள் செய்த பெரியபுராண சூசனம்.

"கந்தவர்க்க முங்கிளர்மணப் புகையுங்கவின் கொள்ப
　　மும்புனித மஞ்சனமும்
கொந்தவிழ்ந்த நன்மலரு மற்றுளவுங் கொண்டுமாயை
　　யின்குணங்க ளொன்றிலராய்
ஐந்துசுத்தி செய்தகம்புற மிறைஞ்சி யங்கியின்
　　கடன்கழித் தருள்வழிநின்று
இந்தநற் பொருங்கிரியை யன்புடனேயியற்
　　றவல்லவ ரெம்மருகிருப்பார்" என்பது

திருவாதவூரடிகள் புராணம்.

சோமுகன் என்னும் ஓர் அசுரன இருந்தான். அவன் வெகு நாள் அரியதவங்கள் செய்து மிக்க வலியைப்பெற்று தேவர்கள் முனிவர்களை யெல்லாம் மதியாது அவர்களுக்கு இடர்செய்யும் வன்கணாளன், வேத ஒழுக்கங்களைத் தவறி மிக்க காமுகனுனன். இவ்வித தீயோனுகிய அவ்வசுரன் நான்கு வேதங்களையும் கவர்ந்து கொண்டுபோய்க் கடலில் மறைந்துக்கொண்டான். அதைப் பிரமன் அறிந்து இதைத் திருமாலிடம் தெரிவிப்போமென்று தேவர்களோடுபோய் வைகுந்தத்தையடைந்து திருமாலைக்கண்டு வணங்கியமாத்திரத்தில் திருமால் "நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம்; உங்களுக்குவேண்டிய காரியங்களைச் செய்கின்றேன்" என்றுன். பிரமன் சொல்லுவான்! "சோமுகன் என்னும் அசுரன் வேதங்களை கவர்ந்து கடலில்மறைந்தான், அவ்வசுரனைக்கொன்று வேதங்களையெடுத்து எங்களுக்குகொடுப்பாய்" என்றுன். உடனே திருமால் மீனுருவங்கொண்டு கடலில்போய்ச் சோமுகனைத்தேடி கொன்று, வேதங்களைக்கண்டெடுத்துப்பிரமனிடம் கொடுத்தான். பிரமன் முதலிய தேவர்கள் அதைவாங்கிச் சந்தோஷித்தார்கள். பின்னர் மீன்வடிவெடுத்த திருமால் கடலைக்கலக்க அதனைக்கண்ட பிரமன் முதலிய தேவர்கள் பயந்து கைலாசபதியாகிய சிவபிரானிடம் சென்று வணங்கி இவ்விதம் திருமால் மீனுருவங்கொண்டு கடலைக் கலக்கி வருத்துவதைத் தெரிவித்து அம்மீனை அழித்து அடியேங்களைக் காத்தருளல் வேண்டுமென்று கேட்டார்கள். சிவபிரான் வலைஞர் மணமகன் வடிவந்தாங்கிவந்து அம்மீனை வலையிற் பிடித்துக் கரையில்போட்டார். தேவர்களெல்லாம் சிவபிரானை மகிழ்ந்து தோத்திரஞ்செய்து வாழ்த்தினுர்கள். பின்பு சிவபிரான் மீன்வடிவெடுத்த திருமாலை, அம்மீன்வடிவை நீக்கி நல்லறிவு நல்கி இலக்குமியோடும் வைகுந்தத்தை யடையச்செய்தார். பின்பு சிவபிரான் எவரும் விரும்பத்தக்க பெருமையையுடைய வலையர் மணமகன் வேடத்தைக்கொண்டு அருந்தவச் செல்வியாகிய அம்மையார் பூசை செய்துவரும் புன்னையங்கானில் வந்தருளினர். தமது குலத்தில் அம்மை வந்தவதரிக்கப் புண்ணியஞ்

செய்யப்பெற்றவர்களாகிய அவ்வலையர்கள் (சுவாமியைப்பார்த்து) புயவலியுடையவரே! நீர் யாவர்? உமது ஊர் யாது? பேர் யாது? என்று கேட்க, "நான் வடதேசம்; எனது பெயர் சுந்தர வலைஞன் என்று சொல்லுவார்கள்" என்றார். அவ்வலையர்கள் நீர்வந்த காரியம் யாது? என்று வினவ, எனது "மரவுக்குத்தக்க மணம் முடித்தற்கு" என்றான். "உமது மரவுக்கேற்ற ஓர் அழகிய பெண் புன்னைமர நிழலிலிருக்கின்றாள்" என்று அம்மை தவஞ்செய்யும் சாலைக்கு அழைத்துக்கொண்டு போய்க்காட்ட, வலையர் பெண்ணுய் வடிவங்கொண்ட அம்மையார் வலையர் மணமகனாய் வந்தது சிவபிரானே யென்று தெரிந்துகொண்டாள். வலையர் தலைவனாய் வந்த சிவபிரானை அம்மையார் எழுந்துநின்று வணங்கி, "தேவ ரீர் வேடர்கோலம் கொள்ளும்போது வேடச்சியாயும், புலையர் வேடம் கொள்ளும்போது புலைச்சியாயும் வந்ததுபோல், இப் போது நீர் வலைபராய் வந்தபோது வலைச்சியுமாயினேன்" என்றாள். அடியேன் பலநாள் செய்தற்கரிய சிவபூசை செய்து வந்த புண்ணியத்தால் தேவரீரை இன்றுகண்டு தரிசித்தேன்; என்று தோத்திரம் செய்தாள். அத்தோத்திரம் செய்த அம்மை யாரை வலையர் பெண்வடிவத்தை மாற்றி இடபாரூடராய்க் காட்சி தந்தருளினர். எதிர்நின்று வணங்கித் தோத்திரஞ்செய்து நிற் கும்அம்மையினது திருமுக மண்டலத்தைப்பார்த்து "பெண்ணே! இன்று மாசிமாதம் வருகிற மகநட்சத்திரப் பௌரணையாத லால் நீ சமுத்திர ஸ்நானஞ்செய்து ஈண்டுவருவாயாக" என்று பணித்தருளினர். அம்மையார் எல்லா மகிமையும் பொருந்திய கடற்கரையிற் சென்று விதிப்படி ஸ்நானஞ்செய்து புன்னைமர நிழலில் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானது திருவடிகளை வணங்கித் தோத்திரஞ்செய்து நின்றாள். அங்ஙனம் நின்ற உமை யம்மையினது முன்னர் திருநிருத்தஞ்செய்து அம்மையாரை யிடது தொடையிலிருத்தி திருப் புன்முறுவலோடு "உனக்கு யாதுவரம் வேண்டு" மென்று கேட்க, அருள்வடிவாகிய அம்மை யார் சொல்லத் தொடங்கினாள். "உயர்வாகிய இவ்வனத்துக்கு

புன்னைவனமென்றும், இங்கே எழுந்தருளியிருக்கின்ற தேவரீருக்கு புன்னைவனநாதரென்றும், இவ்வூருக்கு அம்பிகாபுரமென்றும் உலகம் சொல்லி ஓங்கும்படி கிருபைசெய்தல் வேண்டும். தேவரீர் இத்தலத்தில் நித்திய சாந்நித்தியராயிருத்தல் வேண்டுமென்றும், மாசிமாதம் வரும் பௌரணையில் இக்கடல் தீர்த்தத்தில் முழுகுகின்றவர்களுக்கு எல்லா வரங்களையும், மோக்ஷத்தையும் கொடுத்தல்வேண்டு" மென்றுங்கேட்க சிவபிரான் "அங்ஙனம்கொடுத்தோமென்ற"ருளினர். இங்ஙனம் அம்மையார் கேட்ட வரங்களை யெல்லாம் திருமேனியழகர் கொடுத்தருளி, பிரமா, விஷ்ணு ருத்திரவடிவாய் விளங்குகின்ற சிவலிங்கத்தில் கலந்தருளினர். அத்தலத்தில் அம்பிகை பூசித்து வழிபட்ட சிவலிங்கப் பெருமானைப்போல வேறெங்குமில்லை. அச்சிவலிங்கப் பெருமான் தன்னை அர்ச்சித்து வழிபடுவோர்க்கு எல்லாவரங்களையும் கொடுத்தருளுவர். அம்பிகை பூசித்த அத்தலத்தை அன்புடன் நினைப்பவரும், அத்தலத்தில் வசிப்பவரும், அத்தலத் திருவீதி வலம்வருபவரும், இகபர வின்பங்களை யடைவார்கள். என்று சூதமுனிவர் சொல்ல, சௌனகாதி முனிவர்கள் கேட்டு ஆனந்தமடைந்தார்கள்.

இம்மகிமையை யுடைய தலத்திலே வந்து தேவர்கள் பூசித்த கதையை முனிவர் சொல்லுவாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

தேவர் சிவபூசைசெய் படலம்.

சோழராஜா அரசாட்சி பண்ணுகின்ற நாட்டிலே எழுந்தருளியிராநின்ற திருமேனி அழகர் சந்நிதானத்தைத் தேவர்கள் அடைந்து ஆன்மகோடிகளுக்கு மலநீக்கமும், சிவத்துவவிளக்கமுஞ் செய்கின்ற திருமேனி அழகரைக் கண்குளிரத்தரிசித்துத் துதிப்பாராயினர். "பசுவின்பால் அதன் தேகமுழுவதும் வியாபித்திருப்பினும் மடுவினிடம் வெளிப்படுவதுபோலவும், பாலிலுள்ள நெய் போலவும், எள்ளிலுள்ள எண்ணெய் போலவும்

விளங்கும் சிவம் பிரமவிஷ்ணுக்கள் அன்னமாயும் பன்றியாயு முருவெடுத்துத் தேடினால் எங்ஙனம் வெளிப்படும்''! எனத் தோத்திரஞ்செய்து அநாதி மல முத்தபதியாகிய பரமசிவனைப் பூசித்தற்பொருட்டு பூவான்மணிமணிநீர்ப் பொய்கை யொன்று தொட்டுத் தடாகப் பிரதிஷ்டை செய்தார்கள். பின்பு பத்திர புஷ்பம் பஞ்சகவ்வியம் பஞ்சாமிருதம் முதலிய அபிஷேகத் திரவி யங்களும் தயார் செய்து வேத மந்திரங்களைச் சொல்லி அபிஷே கம் செய்து பல வஸ்திரங்களாலும், ஆபரணங்களாலும் அலங் கரித்துத் தூப தீபம் முதலிய உபசாரங்கள் செய்து மேகங்களின் முழக்கம்போல் திவ்விய மந்திரங்களால் அர்ச்சனை செய்து மார்க் கண்டரைக் காத்தருளிய பெருமானது திருவடிகளை 'சங்கர, சிவ சம்பு, சதாசிவ, மஹாதேவ' என்பது முதலிய நாமங்களால் தோத்திரஞ் செய்து வணங்குவாராயினர்.

அங்ஙனம் தோத்திரஞ் செய்கிற தேவர்கள் முன் திருமேனி அழகர் பிரசன்னராகி "உங்களுக்கு என்னவரம் வேண்டு" மென்று கேட்டருளினர் தேவர்கள் சொல்லுவார், "தேவ தேவராகிய சுவாமீ! எப்போது எங்களுக்குத் துன்பம் வருகிறதோ அப் போது ஆட்கொண்டருளல் வேண்டும் எங்களால் இத்தடாகம் உண்டானதால் இதற்குத் தேவதீர்த்தமென்று யாவருஞ் சொல்ல வேண்டும்; இத்தீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணியவர்களுக்கு இக பர சித்திகளையும், தரல்வேண்டு'' மென்றுகேட்க, சுவாமி கொடுத் தருளினர். அனுமதி பெற்றுக்கொண்டு தேவர்கள் தங்கள் தங்கள் பதங்களை யடைந்தார்கள். தேவ தேவராகிய திருமேனி அழகர் பூதகணங்கள் முதலியன் ஞானவழிபாடுசெய்ய, திருவருள் புரிந்து வீற்றிருந்தருளினர். இது நிற்க,

இரண்யக்கன் மகனாகிய அந்தகன் என்னும் ஓர் அசுரன் இருந் தான். அவன் அரிய தவங்களைச் செய்து தனக்கு வேண்டிய வரங் களை யெல்லாம் சிவபிரானிடம் பெற்றுக்கொண்டவன். தேவர் முனிவர்களை யெல்லாம்மதியாது அவர்களுக்கு இடர் செய்யும் வன்கண்ணன். காலன் போன்ற செய்கை யுடையவன். பூமி

அதிரும்படி நடப்பவன். பெரிய வாள் முதலிய படைக்கலன்களை யுடையவன், கருக்கொண்ட மேகம்போன்ற நிறமுடையவன், இடி இடித்தாற்போன்ற குரல்உடையவன், மலர்மாலை யணிந்ததோளை யுடையவன். அண்டசராசரங்களெல்லாம் அஞ்சத்தக்க கொடுங் கோலுமுடைய அவ்வந்தகன் எல்லா வகையாலும் வலியுடையவனுய்த் தனக்கு நேர் நின்று போர் செய்பவர் ஒருவருமின்மையால் அவ்வந்தகனென்னும் அசுரனுக்கு உடம்பில் தினவுண்டாயது. அவனோடு யுத்தஞ் செய்து பொருதற்கு எண்ணித் "திருமாலும் பிரமனும் அவனிடஞ்சென்று அவனது மாயத்தைக் கண்டு விலகுவாரெனின் மற்றும் தேவர்கள் எங்ஙனம் அவனை வெல்லுதற்கு முடியும்"! (முடியாது என்றபடி) அங்ஙனமிருந்தும், தேவர் பகைவராய் வில்லுப் படைகளையும், தண்டுப் படைகளையுங் கொண்டு போயும் யுத்தத்தில் தோல்வி யடைந்தார்கள். திருமால் முன்னர் அத்தேவர்களை யெல்லாம் பெண்களாக்கி, பெண் அணிகலன்களைத் தாங்கிச் செல்லும்படி கட்டளை யிட்டான். திருமால் முதலிய தேவர்கள் மனவருத்தத்தோடு திரும்பி புன்னுகவனமென்று சொல்லப்படுகின்ற திருவேட்டக்குடிக்கு வந்தனர். வந்த பின்னர் "இன்னமும் திருமேனியழகரை பூசித்து ஏத்துவோ" மென்று முன்னர்க் கூறிய வண்ணம் சிவபூஜை செய்து தோத்திரத்து, "ஏ ஆண்டவனே! உன்னருளினலே வாழ்ந்தனம், இப்போது பகையனுகிய அந்தகன் என்னும் அசுரன் எங்களைத் துன்புறுத்த, அதனல் அஞ்சினேம். மகாதேவரே! பால் கடலில் தோன்றிய ஆலகால விஷத்தை யுண்டு தேவர்களைக் காத்தருளினீர். யமனை உதைத்து மார்க்கண்டரைக் காத்தருளினீர். முருகப்பிரானைக் கொண்டு சூரபதுமனை அழித்தீர். அப்படிப்பட்ட மகிமையை யுடைய தேவரீரது திருப்பாதங்களே பயந்தவர்களாகிய எங்களுக்கு புகலிடமாகு" மென்றூர்கள். அவர்கள்முன் திருமேனி யழகர் பிரசன்னராகி "இவ்வித பெண் வடிவங்களை எவ்வித மடைந்தீர்கள்" என்றனர். "எல்லாம் அந்தகாசுரனது செயலேயாகு" மென்று திருவடியிலே வணங்கினூர்கள். தேவர்களது

வசனத்தைக் கேட்ட சிவபிரான் "அந்தகாசுரனை அழித்துவிடுவோ" மென்று தேவர்களுக்குச் சொல்லிவிட்டு வைரவரை மனசிலே நினைக்க உடனே வைரவர் தோன்றி திருமால் பிரமன் முதலிய தேவர்களும் அஞ்சத்தக்க கபாலம், சூலம் முதலிய படைகளுடன் வந்து சுவாமி திருவடிகளிலே வணங்கினர். வணங்கி நின்ற வைரவரைச் சுவாமி பார்த்து, "தேவர்களுக்கு இடர் செய்கின்ற கொடியவனாகிய அந்தகாசுரனைப் போய்க் கொன்றழித்து அத் தேவர்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இன்பமடையச் செய்து இங்கே வருவாயாக" என்று உத்தரவளித்தனர். வைரவர் சுவாமிதிருவடியை அன்புடன்வணங்கி "விரைவில் போய்க் கொடியோனாகிய அவ்வசுரனை அழித்துவந்து தேவரீரது திருவடிகளை வணங்குவே" னென்று தேவர்கள் மகிழும்படி சொல்லிச்சென்றார். தனது வலிமையால் அந்தகாசுரனோடு போர் புரிந்து அவனை அழித்து "அந்தகாரி" என்னும் நாமத்தையும் பெற்றார். மீட்டு வந்து திருமேனியழகர் திருவடிகளை யடைந்தார். திருமேனியழகர் தேவர்களைப் பார்த்துக் "கொடியவனாகிய அந்தகாசுரனை வைரவரைக் கொண்டு கொன்றழித்தோம். நீங்கள் பழைய தேவ வடிவம் எடுத்து விண்ணுலகை யடையக் கடவீர்களென்று" உத்தரவளித்தனர். தேவர்கள் "நாங்கள் உய்ந்தோம். உய்ந்தோம். பழைய வடிவத்தையு மெடுத்தோம் தேவரீரைப் பூசை செய்யும் பேற்றையு மடைந்தோம்." என்று தோத்திரஞ் செய்து "மூவர் முதலிய யாவராலும் போற்றப்படுகின்ற இத் தலப் பெயர் கோடீசுவர மென்றும், தேவகோடிபுர மென்றும் தேவரீரை வந்து வழிபடும் பக்குவான்மாக்களுக்கு முத்தியருளுதலும் வேண்டும்" என்று கேட்டனர். "அவ்விதமே செய்வோ" மென்று சுவாமி உத்தரவளித்தனர். இவ்வித அனுக்கிரகம் பெற்ற தேவர்கள் தங்கள் தங்கள் பதங்களை அடைந்தார்கள். என்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்லிய பின்னர் முனிவர்களைப் பார்த்து இன்னும் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்ற இனிய கதை யொன்று சொல்லுகின்றேன, கேளுங்கள் என்றார்.

திருச்சிற்றம்பலம்.

அருச்சுனன் பாசுபதம் பெற்ற படலம்.

எல்லாச் சிறப்பையு முடைய அத்தினபுரியிலே சந்திரகுலத் தரசனாகிய பாண்டுமன்னனுக்கு, தருமன் வீமன் அருச்சுனன் நகுலன் சகாதேவன் என்று ஐந்து குமாரர்கள் இருந்தார்கள். அவருள் நடுநாயகமாய் விளங்கிய அருச்சுனன் என்பவன் அழகில் சிறந்தவன். வில்போர் மல்போர்களில் ஒருவரும் நிகரில்லாதவன். சிவபிரானிடத்தில் பேரன்புடையவன். பெண்களால்விரும்பப்படும் பேரழகு வாய்ந்தவன். மாயவனாகியகிருஷ்ணனைத் தேர்ச்சாரதியாகவும், துணைவனாகவும் கொண்டு பாரதக் கதையை முடித்தற் பொருட்டுப் பாசுபதாஸ்திரத்தை பரமசிவன்பால் பெறும் பொருட்டு எவ்வகை வளங்களுஞ் சிறந்து விளங்கும் புன்னையங் கானமாகிய திருவேட்டக்குடி யென்னும் தபோவனத்தில் வந்து திருமேனியழகர் சாந்தநாயகி யம்மையாரை நோக்கி அரிய தவத்தைச் செய்வானாயினான். சுவாமி அம்மையாரிருவரும் "அருச்சுனனுக்கு அருள்செய்யும் பொருட்டும், துரியோதனனால் அருச்சுனன் தபசை அழித்தற்கு அனுப்பப்பட்ட மூகாசுரன் என்னும் பன்றியைக் கொல்லும் பொருட்டும் செல்வோ" மென்று ஒரு திருவிளையாடலைச் செய்ய விரும்பினார். எப்பொருட்கும் இறைவனாய் விளங்குஞ் சிவபிரான் வேடரூபங்கொண்டு கையிலே வில்லை யெடுத்தார். உலகமாதாவாகிய அம்மையாரும், விநாயகர், சுப்பிரமணியரும் அவ்வேடவடிவங்களையே கொண்டார்கள். நான்கு வேதங்களையும் நாய்களாகவும், நந்தியந்தேவரை மானாகவும் உருவெடுக்கச்செய்து வில்வேடர்களாய் வரும்போது அருச்சுனன் தபசு செய்துகொண்டிருக்கும் வனப்பக்கத்தில் தபசை அழிக்க வந்துநின்ற மூகாசுரன் என்னும் பன்றியை இரண்டு துண்டமாகும்படி பரமசிவனாகிய வேடன் பாணத்தினால் எய்தனர். பன்றியைக் கொல்லும்பொருட்டு அவண் வந்த பொய்வேடராகிய சிவனும் தபசு செய்யவந்த மெய்வேடராகிய அருச்சுனனும் ஒருவருக்கொருவர் கோபமூண்டு வில்போர் மல்போர் செய்வதை அம்மை ஆச்சரியத்துடன் (மற்சரேகையை) பார்க்க, சிவபிரானாகிய வேடனை அருச்சுனன் வில்லால் அடித்தான். அந்நாள் மதுரையிலி

பாண்டியன் பிரம்பினல் அடித்த முதுகினில் தாய்தந்தையிலியாகிய சிவபிரான் ஏற்றுக்கொண்டார். இவ்விதம் இருவரும் ஒருவர்க்கொருவர் வில்போர் மல்போர் செய்தும், பராக்கிரமம் சம்வாதம், கூறியும் வருந்தன்மையில் அருச்சுனன் "ஒருவராலும் பொருதற்கரிய என்னேடு போருக்கு வந்தவன் சிவபிரானேயாகுமென்று" நினைத்துத் தோத்திரஞ் செய்ய, சுவாமி "உனக்கு யாது வரம் வேண்டுமென்று கேட்க "பாசுபதாஸ்திரம், வேண்டு" மென்று கேட்டான். உடனே சிவபிரான் கொடுத்தருளினர். "இன்னும் யாதுவரம் வேண்டு" மென்று கேட்க, "தேவரீரது மலர் சிலம்படி இன்பமென" அதையுங் "கொடுப்போ" மென்று உத்தரவளிக்க, அருச்சுனன் பெருமகிழ்ச்சி அடைந்தான். சிவபிரான் "நாம் வேடத்திருஉரு வெடுத்துத் தரிசனங் கொடுத்தமையால் நீயும் வேடவுருவங்கொண்டு அன்புடையவனுகித்திருக்காளத்தி மலையில்வந்து அங்கே விளங்கும் ஓர் அற்புத லிங்கத்து அகங்கனிந்து பூஜைசெய்வாயாக! அதன் பின்னர் நாம் முத்தியின்பப் பெருவாழ்வைக்கொடுப்போ" மென்றார். (†)

(†) "இவர் முன்பிறப்பிலே பஞ்சபாண்டவருள் ஒருவராகிய அர்ச்சுனர் என்றுணர்க. பாசுபதாஸ்திரம் பெறவேண்டிப் பெருந்தவஞ்செய்த அருச்சுனரோடு கருணாநிதியாகிய பரமசிவன் வேட்டுவ வடிவங்கொண்டு வந்து, விற்போர் செய்து, அவரது வில்லினல் அடிபட்டு, பின்பு அவரைத் தீண்டி மற்போர் செய்து, பின்னர்த்தமது வடிவத்தைக் காட்ட; அதுகண்ட அருச்சுனர் சிவனை வணங்கி, தமக்கு முத்தி தந்தருளும் பொருட்டு விண்ணப்பம் பண்ணினர். அதுகேட்ட பரமசிவன், நீபகைவரைக் கொல்லுதற் பொருட்டுப் பாசுபதாஸ்திரம் பெற நினைந்து, தவம் செய்தாய்; ஆதலால் இப்பொழுது, பாசுபதாஸ்திரமே தருவோம். என்று கொடுத்தருளி, நீ என்னை வேடன் என்று. இகழ்ந்தமையால் வேட்டுவ ராசனுய்ப்பிறந்து, தக்ஷிணகைலாசமாகிய காளத்தி மலையை அடைந்து அன்புருக்கொண்டு நம்மைப் பூசித்து, பன்றி முதலிய விலங்குகளைக் கொன்று, அவற்றின் மாமிசத்தை எமக்கு நிவேதிப்பாய்; அந்நாளிலே உனக்கு மோக்ஷம் தந்தருளுவோம். என்று திருவாய் மலர்ந்தருளினர்" இது பெரிய புராணத்தில் கண்ணப்பர் புராண சூசனத்தில் கண்டது.

இங்ஙனம் அர்ச்சுனனுக்கு அருள்புரிந்து, பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன் என்னும் அஷ்ட மூர்த்தியாய் விளங்குஞ் சிவபிரான் சிவலிங்கத்தில் கலந்தருளினர். இவ்விதஞ் சிவபிரான் வேட வடிவங்கொண்டு வந்து அருச்சுன னுக்குத் திருவருள் புரிந்த திருக்கோலத்தைத் தேவர்களெல்லாம் வந்து காணுதற்குமுன் கரந்தருளின படியால் தேவர்கள் அங்கே வந்து சந்நிதியை அடைந்து வேட உருவத்தைக் காட்டவேண்டு மென்று "சங்கரா சதாசிவ தாணுவே சிவனே மழுப்படையாய் சிற்பரா சின்மயா தற்பரா சம்புவே" என்று பரிசுத்தராகிய சிவ பிரானை வணங்கித் தோத்திரஞ் செய்து பிரார்த்தித்தார்கள். அங்ஙனம் பிரார்த்தித்த தேவர்களைச் சுவாமிபார்த்து உங்களுக்கு யாது வரம் வேண்டுமென்று வினவ, "மண்ணவருங்காணும்படி வேடர்வடிவெடுத்தருள வேண்டு" மென வேண்டுவார்க்கு வேண் டிய வடிவம் கொள்ளும் சிவபிரான் தேவர்கள் விரும்பியவண்ணம் வேட வுருக்கொள்ளத் திருவுளங்கொண்டு முன் வந்ததுபோல் சுவாமி அம்மை விநாயகர் சுப்பிரமணியர் வேடர் வடிவத்தை எடுத்து, வேதத்தையும், நந்தியையும், நாய், மான்உருவங்களையும் எடுக்கச்செய்து தேவர்கள் காணும்படி காட்சிதந்தருளினர். அங்ங னம்காட்சி தந்தளிச்சொல்லுவார். "இவ்வேடத் திருவடிவத்தைத் தரிசிப்பவர் பூசிப்பவராகிய மண்ணவர் இகபோகங்களை யனுப வித்து பின்பு, பண்ணவராய்ப் பரலோகங்களையும் அனுபவித்து, புண்ணியராய்ச் சிவபோகங்களையும் அனுபவித்து வாழ்வார்கள். உங்கள் பொருட்டு எடுத்த இச்சத்தி வடிவத்தைக் கொண்டே படைப்பு முதலிய பஞ்சகிருத்தியங்களைச் செய்து ஆன்மகோடி களுக்கு அருள்புரிவோ மென்று" அனுக்கிரகஞ் செய்து சிவலிங் கத்தில் மறைந்தருளினர். என்று சூதமுனிவர்சொன்னர். சௌன காதி முனிவர்கள் கேட்டு மகிழ்ந்து தோத்திரஞ்செய்தார்கள். பின்னருஞ் சூதமுனிவர் இம்மான்மியத்து, இன்னும் இனிய கதை யொன்று உளது சொல்லுகிறேன், முனிவர்களே ! கேளுங்கள்

என்று தனது குருவாகிய வியாசமுனிவரை எழுந்து வணங்கிச் சிந்தித்துக்கொண்டு சொல்லுவாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

அனவரதன் தரிசனஞ் செய் படலம்.

பூமியின்கண்ணுள்ள நவகண்டங்களையும் ஆண்டு வந்த அனவரதன் என்னும் நாமம் பூண்ட ஓர் அரசன் இருந்தான். அவன் பெருவலி படைத்தவன். பலகலைகளையும் ஆராய்ந்தறிந்த ஞானவான். நற்குணங்கள் நிறைந்துள்ளவன். சுத்தமான அறிவுள்ளவன். போரில் தோல்வியுற்ற மன்னவர்கள் வணங்கும் வீரக்கழலை யுடையவன். சைவாகம சாஸ்திரங்களை யெல்லாம் நன்ருய்க் கற்றுணர்ந்து முழுமுதற் கடவுள் பசுபதியாகிய சிவபிரானே என்று தெளிந்தவன். பஸ்ம ருத்திராக்ஷங்களை அணிகலங்களா யுடையவன். சிவாராதன தற்பரன். அஞ்செழுத் துண்மையை நன்குணர்ந்தவன். பகைவரை வெல்லுஞ் சிங்கேறு போன்றவன் நூலாராய்ந்த நுண்ணுணர்வாளராகிய அநேக மந்திரிகளை யுடையவன். கடல் போன்ற சதுரங்க சேனு சமூகங்களை யுடையவன்.

இம் மகிமையை யுடைய அனவரதன் என்னும் அரசன் சிவஸ்தலங்களைத் தரிசிக்க வேண்டுமென்று நினைத்து பெரியோர்களைப் பார்த்து " சிவஸ்தலங்களுக்குள்ளே முத்தி நல்க வல்ல முதன்மை ஸ்தலம் யாதென்று " வினவ, அப்பெரியோர்கள், " அரசனே கேட்பாயாகப் பதினெண் புராணங்களுள் காந்தமகா புராணத்துள் க்ஷேத்திர காண்டத்தில் புன்னையங்கானமாகிய திருவேட்டக்குடி உயர்வுடையதாகக் கேட்கப்படுகிற " தென்று சொன்னுர்கள். அரசன் அந்த மகத்தாகிய திருவேட்டக்குடியைத் தரிசனம் பண்ணுவதற்கு எண்ணங்கொண்டான். அதை மந்திரிமார்கள் அறிந்து சதுரங்க படைத்தலைவர்களைப் பார்த்து சதுரங்க சேனைகளை எல்லாம் கொண்டுவரச் சொன்னுர்கள். அரசன்

முன் நால்வகைச் சேனைகளும் வந்துசூழ்ந்தன. மாகதர்களாகிய வித்துவான்கள் அரசனது வீர பாராக்கிரம வெற்றியைப் புகழ்ந்து பாடவும், மந்திரிமார்களோடு தேர்மிசை இவர்ந்து வெண்கொற்றக் குடை நிழற்றவும், கடல் போன்ற சேனாசமூகங்கள் சுற்றி வரவும், தூசுப்படை ஆகாயம்வரை பரவவும், சென்று நாடுநகரங்களுக்குப் பக்கமாயமைந்த சிவஸ்தலங்களை இறங்கித் தரிசனஞ் செய்துகொண்டு, நாடு நகரங்களையும், காடு காட்டாறுகளையும், மலை மலைவனங்களையும் கடந்து சென்று நீர்வளம் நிலவளங்களால் சிறப்புறுகின்ற புன்னைவனமாகிய திருவேட்டக்குடியை அடைந்தான். அடைந்த பின்னர் சதுரங்கசேனைகளை ஒரு பக்கமாக நிறுத்திவிட்டு, அத் தபோவனத்தில் திருமேனியழகர் எழுந்தருளி யிராநின்ற சந்நிதியை அடைந்தான். அடைந்த மாத்திரத்தில் ஆநந்த பரவசமுற்று வணங்கி,

“ சங்கரா போற்றி சம்பு சதாசிவ போற்றி நங்கை
பங்கரா போற்றி முக்கண் பண்ணவா போற்றி மானேந்து
அங்கரா போற்றி ஆதி அந்தமில் நாதா போற்றி
பொங்கரா வணிந்த வேணிப் புண்ணியா போற்றி போற்றி.

தற்பர போற்றி கங்கைச் சடைமுடிப் பரம போற்றி
அற்பர போற்றி வெய்ய வந்தகற் கியம போற்றி
பொற்பர விந்தன் மாயன் போற்றிடுந் தலைவ போற்றி
சிற்பர வெளியி லாடுஞ் சிவசிவ போற்றி போற்றி,

சந்திர மௌலி போற்றி தந்தியின் உரியாய் போற்றி
மந்திர மூர்த்தி போற்றி மான்மழு வாளி போற்றி
தந்திர நூலாய் போற்றி சதுர்மறைப் பொருளே போற்றி
இந்திரன் இமையோர் போற்றும் இறைவனே போற்றி
[போற்றி ”.

என்று தோத்திரம் பண்ணிப் பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து திருமேனியழகர் சாந்தநாயகி அம்மையார் எழுந்தருளி யிருக்கின்ற இடத்தை ஆலயத்திருப்பணி செய்ய எண்ணினன்

சுவாமி அம்மை விநாயகர் சுப்பிரமணியர் சண்டேசுரர் முதலிய மூர்த்திகளுக்கும், பரிவார மூர்த்திகளுக்கும், கெர்ப்பக்கிருகம் அர்த்த மண்டபம் முன் மண்டபம் மஹாமண்டபம் பரிவார மண்டபங்களும், கல்யாண மண்டபமும், கோபுரங்களும், மற்றும் ஆலயத்துக்குரிய திருப்பணிகளெல்லாம், சிற்பசாஸ்திரிகளைக்கொண்டு கட்டிமுடித்தான். பின்புசிவத்துவிசாரராகிய ஆதிசைவப்பிராமணர்களை அழைத்து வந்து ஆகம விதிப்படி யாகங்கள் செய்து சோசியர்களைக் கொண்டு நல்லதினம் பார்க்கச்செய்து தை மாசம் சதுர்தசி பூச நட்சத்திரம் கூடிய இடப லக்கினத்தில் வேதங்கள் முழங்கவும், பல்வகைவாத்தியங்கள் ஒலிக்கவும், சுவாமியைப்பிரதிஷ்டை செய்தான். சிவலிங்கம் முதலாகிய மூர்த்திகளுக்கெல்லாம் மஹாகும்பாபிஷேகம் செய்து, புஷ்பம் திரவிய முதலியவற்றால் அருச்சனை செய்து அநேக வர்க்கான்னங்களும், பலகார வர்க்கங்களும், நிவேதனஞ்செய்து தூப தீபம் முதலிய சோடச உபசாரங்கள் செய்ய, அரசன் தரிசித்து மகிழ்ந்து சந்தோஷித்தான். அன்று முதல் ஒரு மண்டலம் அபிஷேகம் முதலிய பூசைகள் செய்து வந்து மாசிமாதம் சிவராத்திரியில் நாலுகாலமும் விசேட பூசைகள் செய்வித்தான். சிவராத்திரி நாலு காலங்களிலும் சிவதரிசனஞ் செய்தான். நாலாங்காலத்தில் அரசனுக்கு அரிய நித்திரை சிறிது வர, திருமேனிபழகர் சொப்பனத்திலே தோன்றிச் சொல்லுவார் " அன்பனே நீ மகிழ்ந்து ஆலயங்கட்டிப் பிரதிட்டை செய்து முடித்தாய், நாம் மிக்க மகிழ்ச்சி யடைந்தோம். முன் திருவிளையாடல் புரிந்த நமது வடிவங்களை அழகுறச் செய்வித்து வருஷந்தோறும் மாசி மாச மக நட்சத்திரத்தில் பிரமோற்சவத் திருவிழா, உலகமெல்லாம் விருத்தி யடையும் பொருட்டுச் செய்வாய்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அனவரதன் " அவ்விதமே திருவிழாச் செய்கின்றேன். எனது மரபுளோரும் தேவரீரிடத்தில் அன்பு பெருகும்படி திருவருள் புரிதல்வேண்டு" மென்ன சுவாமி " அங்ஙனமாகுக" வெனத் திருவாய்மலர்ந்து சிவலிங்கத்திலே கலந்தருளினர். " பிரம விஷ்ணுக்களால் அறிய

முடியாத சிவப்பொருள் (*) உருவத்திருமேனி தரித்தருளினன் எனின்? இந்த அனவரதன் செய்த மாதவத்தை என்னென்று சொல்வோம்"!

உற்சவ மூர்த்திகளை நிர்மாணஞ் செய்து பின்பு அனவரத மகா ராசன் திருவேட்டக்குடி என்னும் மாநகரத்தை நன்குற அலங் கரிப்பானாய் மாட மாளிகை கூட கோபுரங்கள் விளங்குகின்ற திரு வீதிகள் தோறும் வாழை கமுகு தோரணங்கள் நாட்டுவித்து, நிலைக்கண்ணாடிகள் வைத்து முத்துமாலைகள் தூக்கி வந்த சிவனடி யார்களுக்கெல்லாம், அன்னசாலை தண்ணீர்ப்பந்தல் அமைப்பித்து எட்டுத்திசைகளிலும், பலிபீடமிட்டு, யாகசாலை வேதசாலை கீத சாலை தானசாலைகளும் நிருமித்து இடபம் யானை காமதேனு அசுவம் மூஷிகம் மயில் கிளி முதலிய வாகனங்களும் சப்பிரம் முதலிய விமானங்களும் கோரதமென்னுந் தேர்களும் அலங் கரித்து பூப்பந்தர் போடுவித்து முத்தாரங்கள் தொங்கத் தூக்கி சகல வேத கீத வாத்தியங்கள் முழங்க மாசிமாதம் பூச நாளிலே விநாயகர் சுப்பிரமணியர் சண்டேசுரர் அம்மை சகிதம் சுவாமி திருமேனியழகருக்கும் (பஞ்ச மூர்த்திகள்) பிரமோற்சவ துவசா ரோகணமென்னும் கொடியேற்றுக்காட்சி, முதல்திருவிழா சுவாமி வலைஞர் வேடம்பூண்டு வந்தருளிய காட்சி, இரண்டாந்திருவிழா அவ் வலைஞர் வேடம் பூண்டு மீன்வலை வீசிய காட்சி, மூன்றாந் திருவிழா வலைப் பெண்ணாய் வந்தருளிய உமையம்மையைத் திரு மணம் புரிந்த திருக்கல்யாணக் காட்சி, நாலாந் திருவிழா தேவர் களுக்குப் பெண்ணுரு அமைய அதை நீக்கிக்கொள்ளத் தேவர் கள் சுவாமியைப் பிரார்த்தித்து வேண்ட அதை நீக்கியருளிய

(*) உருமேனி தரித்துக் கொண்ட தென்றலும் உருவிறந்த
அருமேனி யதுவும் கொண்டோம் அருவுரு வானபோது
திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்று நந்தம்
கருமேனி கழிக்கவந்த கருணையின் வடிவுகாணே.

(என்பது சிவஞானசித்தியார்.)

திருக்கோலக் காட்சி, ஐந்தாம் திருவிழா இடப வாகனத் திருக்காட்சி, ஆரும் திருவிழா அருச்சுனன் தவச்சாலையில் சுவாமி வேடரூபங்கொண்டு வந்தருளிய திருக்கோலத்திருகாட்சி, ஏழாந் திருவிழா செந்தமிழ்த் திருமுறைத் திருஉலாவோடு குதிரை வாகனத் திருக்காட்சி, எட்டாந் திருவிழா ரதோற்சவத் திருக்காட்சி, ஒன்பதாம் திருவிழா, தீர்த்தவாரித் திருக்காட்சி, பத்தாம் திருவிழா, ஆகிய பத்து நாள் உற்சவத்தையும் நன்ருய் செய்வித்து, துவசாவரோகணமாய் உற்சவ பரிசமாப்தி செய்து ஆசாரிய உற்சவத்தையும் செவ்வனே செய்வித்து அதன்பின்னர் அனவரத மகாராசனும், பக்தஜனங்களும் சாந்தநாயகி அம்பாள் சமேத திருமேனியழகர் திருவருளைப் பெற்ருர்கள். அனவரத மகாராசன் இன்னும் சுவாமிக்கு, நித்தியம் நைமித்திகம், விஷேடமென்னும் பூசைகள் சிறப்பாய் நடநதுவரும்படி நிபந்தங்களாகிய படித்தரங்களும் கிராமங்களும் ஏற்படுத்தி வைத்து, சுவாமியிடம் உத்தரவு பெற்றுப் புன்னையங்கான மாகிய திருவேட்டக்குடி ஸ்தலத்திலிருந்து புறப்பட்டு நால்வகைச் சேனைகளுஞ்சூழ, திருவாலவாய் என்னும் மதுரையை வந்தடைந்தான். பின்பு பலநாள் வாழ்ந்து சிவபெருமானது திருவடிப்பேரின்ப வாழ்வைப் பெற்ருன்.

அந்த அனவரத மகாராசன் மாபினரும் திருமேனியழகர் திருவிளையாடலைக் கண்டு தரிசித்துத் தொண்டராயிருந்து முத்தியின்பம் பெற்ருர்கள்., என்று சூதமுனிவர் சொல்ல சௌனகாதி முனிவர்கள் வணங்கிக் கேட்டுப் போற்றினர்கள். பின்பும் சூதமுனிவர் முனிவர்களைப்பார்த்துத் திருவேட்டக்குடி தீர்த்தமான்மியத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள் ! என்று சொல்லத் தொடங்கினர்.

திருச்சிற்றம்பலம்.

தீர்த்த விசேடப் படலம்.

வசிஷ்ட முனிவரின் குமாரர்களை விசுவாமித்திர முனிவரின் ஏவலினால், கன்மாடபாதன் என்னும் அசுரன் கொன்ற காரணத்தால், வசிஷ்டர் தனது புத்திர சோகத்தால் தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதற்கு அநேக உபாயங்கள் தேடியும் ஒன்றாலும் முடியாததால் கடலில் வீழ்ந்தார். அங்ஙனம் வீழ்ந்தும் அவரது உயிர் நீங்கவில்லை. அதுசமயம் அக்கடலின் முன் காணப்பட்ட, மணற்குன்றின்மேல் திருவேட்டக்குடி, விளங்குவதைக் கண்டார். அதன்கண் விளங்குகின்ற சிவாலயத்தையும், தேவ தீர்த்தத்தையும் பார்த்து தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து புத்திர சோகம் நீங்கி திருமேனியழகரை வணங்கித் துதித்தலும், திருமேனியழகர் " வசிஷ்டனே உன்னுடைய குலம் சத்தி சந்ததியால் விளங்கப் பெறுமெனத் " திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். வசிஷ்டர் அவ்வனத்திலேயே தவஞ் செய்துகொண்டிருந்தார். அதுபோது வசிஷ்டரது மனைவியின் கருவை அழிக்க, கன்மாடபாதன் துரத்திக்கொண்டு வந்தான். அவள் வசிஷ்டரை ஓடி வந்தடைந்தாள். வசிஷ்டர் தேவதீர்த்தத்தை எடுத்து தெளிக்க கன்மாடபாதன் குற்றங்களெல்லாம் நீங்கி அவ்விடத்தை விட்டு நீங்கினான். வசிஷ்டர் மனைவியும் யதாஸ்தானத்துக்குச் சென்றாள்.

தேவ தீர்த்தத்தில் மாசி மகத்தில் முழுகுகின்றவர்கள் விசேடமான புண்ணியத்தை அடைந்து இகபர இன்பங்களையடைவார்கள்.

காஞ்சிமா நகரத்தைப் புரந்தருளுகின்ற ஐயடிகள் காடவர்கோன் என்னும் அரசன் சிவஸ்தலங்கள் தோறும் சென்று திருப்பணிகள் செய்து அவ்வத்தலங்களுக்குத் தனித் தனி வெண்பாப் பாசுரங்களும்பாடி வணங்கிக்கொண்டு வரும்போது எல்லா வளங்களாலும் சிறந்து விளங்குகின்ற சோழநாட்டிலுள்ள திருவேட்டக்குடியை அடைந்தான். அங்கே எழுந்தருளியிராநின்ற திருமேனி அழகருக்கு வெண்பாமாலை பாடி அம்பாள் சுவாமியைத் தரிசனஞ் செய்து கொண்டு காஞ்சி புரத்துக்குத் திரும்பவேண்டு

மென்று மந்திரிகளுக்குத் தெரிவித்து சுவாமி இடமும் உத்தவுர பெற்றுக்கொண்டு சயனித்திருக்கும்போது அரசனது சொப்பனத்திலே சுவாமி அம்பாள் சமேதராய்க் காட்சி தந்தருளி "வடபுறமாய் விளங்குகின்ற (பூவம்) பூங்காவனத்திலே காஞ்சி ஏகாம்பரநாதர் கோவில் முதலியன விளங்குகின்றன. பார்ப்பாயாக" என்றார். ஐயடிகள் காடவர்கோன் விழித்தெழுந்து சிவபிரான் திருவருளை நினைந்து துதித்து அன்று இரவு முழுதும் நித்திரையின்றி ஆச்சரியமடைந்து அன்பு மேலிட்டு, விடியும்முன் நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து ஆலய தரிசனம்செய்து கொண்டு வடபுறம் விளங்குகின்ற திருப்பூங்காவனத்தை அடைந்தான். அவ்வனத்தில் காஞ்சிமாநகரையும் அங்குள்ள ஆலயங்களையுங் கண்டு ஆச்சரியமுற்று இதுவுமோர் இந்திரசாலமென்று அவ்வனத்தில் விளங்குகின்ற கோயிலைத் திருவேகம்பர் திருக்கோயிலாக்கிப் பூசைக்கு ஆகவேண்டியவைகளைச் செய்தான். அந்த நந்தனவனமானது, (பூபம்) பூவனமென்னும் பெயர்பெற்று வழங்கியது. அவ்வரசன் அங்கே பணிசெய்து கொண்டிருக்கும் நாளிலே தேவதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவபிரானைத் தோத்திரஞ்செய்ய சுவாமி எழுந்தருளி விபூதிபரவப்பூசிய திருத்தொண்டர்களோடு விளங்கிக் காட்சி தந்தருளி "நீ இங்கே மோட்சம் பெறுவாய்" எனத்திருவாய் மலர்ந்தருளினர். அவ்விதமே சில நாள் அங்கே தங்கி மோட்சமடைந்தான். முறையே அத்தடாகத்தில் மாசித் திங்கள் முடிவாய் வருகின்ற முப்பதுநாள் ஸ்நானஞ் செய்து வந்தவர்கள் இஷ்ட சித்திகளைப் பெற்று சுவர்க்காதி இன்பங்களையும் பெறுவார்கள். என்று சூதமுனிவர் சொல்லக் கேட்டுச் சௌனகாதி முனிவர்கள் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்தப் படலம்.

சோழ மண்டலத்திலே, பிரமபுரம், வேணுபுரம், வெங்குரு, புகலி, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை,

காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயரையுடைய சிவஸ்தலத்திலே பிராமண குலத்திலே வேதங்களை நன்குய்க் கற்றுணர்ந்தவர்களாகிய கௌணியர் கோத்திரத்திலே சிவபாத இருதயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் கற்பிலே உயர் ஒப்பில்லாத பகவதியாரென்பவர். இவ்விருவருஞ் செய்த மாதவத்தால் அவதரித்தருளிய ஆளுடைய பிள்ளையார் உமையம்மையாரது திருமுலைபாலை உண்ட காரணத்தால் திருஞானசம்பந்தரென்னும் திருநாமம் பெற்றார். சீகாழிப்பதியிலே "தோடுடைய செவியன்" என ஓர் திருப்பதிகம் பாடி அத் தோணியப்பரது திருவருளைப் பெற்று திருக்கோலக்காவில் வந்து பதிகம்பாடி ஓசையோடுகூடிய பொற்றாளம்பெற்று சிவனடியார் திருக்கூட்டத்தோடு திருநனிப்பள்ளி, திருச்சாய்க்காடு, பல்லவனீச்சரம் முதலிய தலங்களை வணங்கிப் பதிகம்பாடி திருவெண்காட்டில் வந்து முக்குளநீர்த் தீர்த்தமாடிப் பதிகம்பாடி, திருமுல்லைவாயில், திருமகந்திரப்பள்ளி, திருக்குருகாவூர் முதலிய சிவஸ்தலங்களைத் தரிசனஞ்செய்து சிதம்பரத்தில்வந்து நடராஜப்பெருமானது திருநடனம் தரிசித்துத் தேவாரத்திருப்பதிகம் பாடி ஆநந்தபரவசராய் அங்கே தங்கி அதினின்றும் புறப்பட்டு, திருவேட்களம் திருக்கழிப்பாலை, திருவெருக்கத்தம்புலியூர், திருத்தூங்கானைமாடம் முதலிய ஸ்தலங்களை வணங்கிப் பதிகம்பாடி திருவறத்துறையில் வந்து தரிசனஞ்செய்து பதிகம்பாடி முத்துச்சிவிகை, முத்துச்சின்னம் முத்துக்குடைபெற்றுக்கொண்டு அங்குநின்றும்புறப்பட்டுத் திருநீலகண்டயாழ்ப்பாணர் முதலிய அடியார்களோடு திருவெண்ணெய் நல்லூர், திருவழுவூர், திருவிசயமங்கை திருப்பனந்தாள், பந்தணைநல்லூர், ஓமாம்புலியூர், புத்தூர், திருப்புறம்பயம், திருச்சேயஞலூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருப்பறியலூர் முதலிய ஸ்தலங்களைத் தரிசனஞ்செய்து சீகாழிப்பதிக்கு வந்தருளினர். திருஞானசம்பந்த சுவாமிகள் அங்கே எழுந்தருளியிருப்பதை திருநாவுக்கரசு சுவாமிகள் கேள்வியுற்று வந்து சந்தித்து அளவளாவி, மிகநட்பினராயிருந்து வரவும், தாம்தோணி

யப்பர் மீது யமகம், மடக்கு, மாலைமாற்று முதலாகச் சொல்லப் பட்ட பலவகையான பதிகங்கள் பாடி அங்கே மகிழ்ந்திருந்தார். பின்பு அதிலிருந்து கண்ணார்கோயில், புள்ளிருக்கும்வேளூர், திருநின்றியூர், நீடூர், திருமண்ணிப்படிக்கரை, திருக்குறுக்கை, அன்னியூர், திருமணஞ்சேரி, எதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி, திருக்கோடிக்கா, கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருந்துதேவன்குடி, திருவின்னம்பர், குரங்காடுதுறை, திருப்பழனம்; திருவையாறு, திருப்பெரும்புலியூர், திருமழபாடி, திருக்கானூர், திருவாலந்துறை முதலிய ஸ்தலங்களை தரிசனம் செய்து திருப்பாச்சிலாச்சிரமத்தில், சுவாமிக்குப் பதிகம்பாடி கொல்லிமழவன் மகளுக்கு முயலகன் என்னும் பிணியைத் தீர்த்தருளி அங்கே எழுந்தருளியிருந்து பின்பு திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய், திருச்செங்குன்றூர் சென்று அங்கே பனிப்பிணியை நீக்கிவிட்டு, திருப்பாண்டிக்கொடுமுடி, வெஞ்சமாக்கூடம், கருவூர், திருப்பாராய்த்துறை, திருச்செந்துறை, கற்குடி, உறையூர், திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, திருத்தவத்துறை, திருப்பாற்றுறை திருவெறும்பியூர், திருக்காட்டுப்பள்ளி, திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருச்சக்கரப் பள்ளி, துறைமங்கலம், அவணிவணல்லூர், திருப்பூவனூர், நல்லூர், திருவலஞ்சுழி, பழையாறை, சத்திமுற்றம் முதலிய ஸ்தலங்களைத் தரிசனஞ் செய்து திருப்பட்டீச்சரத்தில் வந்து பதிகம் பாடியபொழுது அந்த ஸ்தலத்தில் சுவாமி ஞானசம்பந்தப் பிள்ளை யாருக்கு வேனல், வெப்பம் தீரும் பொருட்டு முத்துப்பந்தர் கொடுத்தருளினர். அதைப் பெற்றுக்கொண்டு வடதளி, திருக்குடவாயில், திருநறையூர், குடமூக்கு, திருக்குடந்தைக்காரோணம், திருநாகேச்சுரம், திருவிடைமருதூர் முதலிய ஸ்தலங்களில் வந்து தரிசனஞ் செய்து, திருவாடுதுறையில் வந்து வணங்கி சுவாமியிடம் பதிகம் பாடி உலவாத பசும்பொன் ஆயிரக்கிளி ஒன்றுபெற்று அதினின்றுஎழுந்தருளி திருக்கோழம்பம் வைகன்மாடக்கோயில், திருவழுந்தூர், மூவலூர், மயிலாடுதுறை,

செம்பொன்னிப்பள்ளி, திருப்பறியலூர் முதலிய பதிகளைவணங்கி அடியவரது அரகர முழக்கமும், வேத ஒலியும், பல வாத்திய ஒலியும், முழங்க ஒப்பற்ற திருவருளையுடைய திருஞானசம்பந்தர் அழகு தங்கிய மாடமாளிகைகள் மலிந்த திருவேட்டக்குடியில் வந்தருளினர். அங்கேயுள்ள அடியார்கள் திருவீதிகளில் வாழை தோரணம் நாட்டி பூரணகும்பங்கள் வைத்து எங்கும் அலங்கரித்து பிராமணர்கள் வேதமுழக்கஞ் செய்யவும், அடியார்கள் அரகர முழக்கஞ் செய்யவும், ஆலயத்தில் புகுந்து திருமேனியழகரைத் தரிசனம் செய்து வணங்கி

"வண்டிரைக்கு மலர்க்கொன்றை" என்பதை முதலாகக் கொண்ட திருப்பதிகம் பாடுவாராயினர்.

தேவார பாசுரக் குறிப்புகள் வருமாறு:—

க. பாசுரம் — ஓங்காரவடிவாயுள்ள கொன்றைமலர் மாலை முதலிய பொருள்கள் அணிந்த திருமுடிச் சிறப்பு, திருவடிச் சிறப்பு, அர்ச்சனைச் சிறப்பு.

உ. கடற்கரையின் வளங்கள், புறங்காடாகிய "வீடுஞர்மலி வெங்கடத்துப்" பேயோடு ஆடுதல், அங்கியை அங்கையிலேற்று மகிழ்தல் என்னும் அற்புதம்.

இந்த க்ஷேத்திரத்தில் இராக்காலங்களில் கடற்கரைப் பக்கம் அக்கினிச் சோதி தோன்றுதல் இக்காலத்தும், மெய் யன்பர்களுக்குப் புலப்பட்டு வருகின்றது.

ங. சண்டேசுரநாயனர் சிவபூஜை புரிந்து பயனடைந்த சரிதம்., சநகாதி நால்வருக்கு அறப்பொருளுரைத்தது.

ச. கடற்கரை வளனும், நெற்றிக்கண்ணின் சிறப்பும்.

ரு. தேவர்கள் பால் கடல் கடைந்த காலத்து அக்கடலில் உண்டாகிய விஷத்தைச் சிவபிரான் கண்டத்தில் அடக்கித் தேவர்களைக் காத்து, அமுதகிரணனாகிய சந்திரனைச் சடையில் தரித்தது.

௬. புன்னையங்கானற் சிறப்பும், திரிபுரம் எரித்த விரிபுகழ்ப் பெருமையும்.

௭. ஒரே திருவுருவில் உலகத்துக்கு மாதா பிதா ரூபமாய் விளங்கும் அர்த்தநாரீசுவர மூர்த்தியின் பெருமை.

௮. கடற்சங்கங்கள் புன்னை விருக்ஷநிழலில் தங்குஞ்சிறப்பு, சிவபெருமான் வெள்ளியங்கிரியை அசைத்த இராவணனைத் தோள்வலி குன்றும்படி அடர்த்தது.

௯. சிவபிரான் பிரம விஷ்ணுக்களால் அறிய முடியாத சோதிவடிவாய் நின்றது. தமது செம்பளக் திருமேனியில், பரவப் பூசிய திருவெண்ணீற்றின் சிறப்பு. திருவெண்ணீறு—திருவருள்மயம். "பராவணமாவது நீறு" என்பது தேவாரம். பரா-பராசக்தி. வணம்—தன்மை. இது "நீற்றுப்பதிக நிகழ்த்துங்காலை மாற்றுப் பரையின் வரலாறுகும்." என்பது அகத்தியர் தேவாரத் திரட்டு.

௰. சைவ சமய உண்மையுணராத சமணர் முதலிய புறச் சமயத்தாரது வெற்றுரையைக் கொள்ளாதீர்கள். ஞானகலா சந்திரனைத் திருச்சடையில் தரித்தது.

௰௧. இவ்வித அருமைப்பொருள்கள் நிறைந்து விளங்குகின்ற தேவாரத்திருபதிகத்தை அன்புடன் பாராயணஞ் செய்கின்றவர்கள், இன்ப உலகின்கண் இனிதுவாழ்வார்.

என்று திருமேனிஅழகர் சந்நிதானத்தில் பாடி முடித்தருளினார். பின்பு சிலநாள்தங்கி அங்கிருந்து அரிதகன்று பண்ணை வயல்களினின்றும் நீங்கித் தருமபுரப்பதியை அடைந்து திருநீலகண்ட யாழ்ப்பாணர் வணங்க, "மாதர் மடப்பிடி" என்னும் தமிழ்மறை பாடி, அங்கு இனிதமர்ந்தார். பின்பு திருநள்ளாறு, திருச்சாத்தமங்கை, திருநாகைக்காரோணம், கீழ்வேளூர், திருச்செங்காட்டங்குடிமுதலிய பதிகளைத்தரிசனஞ்செய்து திருமருகலில் வந்து திருப்பதிகம் பாடியருளி விஷத்தால் இறந்த வணிகனைப் பிழைப்பித்துக் கலியாணஞ் செய்துவைத்துச் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு புறப்பட்டுத் திருப்புகலூர், விற்குடி

திருவாரூர், திருவலிவலம், திருகோளிலி, திருவம்பர், திருக்கடவூர், திருவாக்கூர், மீயச்சூர், வந்து தரிசனஞ் செய்து பதிகம் பாடியருளி, திருப்பாம்புரம், திருவீழிமிழலை வந்து பதிகம் பாடிப் படிக் காசு பெற்று, திருவாஞ்சியம், திருவாலங்காடு, சாத்தங்குடி, கரவீரம், திருவிளமர், திருக்காறாயில், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருக்களர் முதலியன தரிசனம் செய்து, திருமறைக்காட்டில் வந்து திருப்பதிகம் பாடி, திருநாவுக்கரசு சுவாமிகள் திறக்கப் பாடிய திருக்கதவை அடைக்கும்படி செய்தருளி, திருவாமூர், அகஸ்தியான்பள்ளி, திருக்கோடிக்கா, திருவுசாத்தானம், கொடுங்குன்றமாகிய தலங்களைத் தரிசனஞ் செய்து மதுரையை வந்தடைந்தார். மதுரையம்பதியில் மங்கையர்க்கரசியாரும், மந்திரிகுலச் சிறைநாயனாரும் எதிர்கொண்டு அழைத்து வணங்கப்பெற்றுத் திருவாலவாய்ச் சோமசுந்தரக் கடவுளைத் தரிசனஞ் செய்து பதிகம் பாடி பாண்டியனது வெப்ப நோயைத் தீர்த்து, சமணரை வென்று அங்கே தங்கியிருந்தார். பின்பு அதினின்றும் புறப்பட்டுத் திருப்பரங்குன்றம், திருப்புத்தூர், திருப்பூவனம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி, இராமேசுவரம், திருவாடானை, திருப்புனவாயில், திருப்பாதாளீச்சுரம், திருமுள்ளிவாய் திருக்கோழம்புத்தூர், திருநள்ளாறு, திருத்தளிச்சேறி முதலிய ஸ்தலங்களை வணங்கிப்பதிகம் பாடி சாக்கியகுருவாகிய புத்தநந்தியை வாதிலே வென்று அவனது தலையிலே இடி இடிக்கப் பதிகம் பாடி, அதினின்றும் புறப்பட்டுத் திருக்கடவூர், திருப்பூந்துருத்தி நெய்த்தானம், திருப்பழனம், சீகாழி, திருமாணிகுழி, திருப்பாதிருப்புலியூர், வடுகூர், திவாக்கரை, இரும்பைமாகாளம், திருவதிகை, திருமாமாத்தூர், திருக்கோவலூர், நல்லூர், திருவண்ணாமலை ஆகிய இந்த, இந்த ஸ்தலங்களைத் தரிசனஞ் செய்து கொண்டு, தொண்டநாட்டை அடைந்து திருவோத்தூரை வணங்கி ஆண்பனைகள் பெண்பனைகளாகப் பதிகம்பாடிக் குரங்கணி முட்டம், காஞ்சிநகர், திருக்காமக்கோட்டம், காரைக்காடு,

அநேக தங்காவதம், திருமேற்றளி முதலியவைகளை வணங்கி, பின்பு திருமாற்பேறு, திருவல்லம், இலம்பையங்கோட்டூர், திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காளத்தி, திருக்கேதாரம், கோகர்ணம், ஸ்ரீபருவதம், நீலகிரி, திருவெற்றியூர், திருவேற்காடு வணங்கிக்கொண்டு, திருமயிலாப்பூரை அடைந்தார். அங்கே சிவநேசச்செட்டியார் தவத்துதித்த பூம்பாவையினது என்பு நிறைந்த குடத்தைச் சாமி சந்நிதியில் கொணர்வித்துப் பதிகம் பாடிப் அவ்வெலும்பைப் பெண்ணாகச் செய்தருளினர். (†) பின்பு திருவான்மியூர், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருக்காட்டூர் முதலிய ஸ்தலங்களை வணங்கி திருத்தில்லையை அடைந்து ஆனந்த நடராஜர் தரிசனம் செய்து, அங்கே தங்கி, பின்பு சிகாழிப்பதிக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து அங்கே தங்கியிருக்கும் காலத்தில் திருஞானசம்பந்த சுவாமிகளைப் பெரியோர்கள் விவாகச் சடங்கு செய்யவேணுமென்று பிரார்த்திக்க, சுவாமிகள் அதற்கு இசைந்து திருமணக்கோலஞ் செய்து மங்கள வாத்தியங்கள்முழங்க அடியார்களோடு திருப்பெருமணநல்லூரை

(†) மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை யமுதுசெய் வித்தல்
கண்ணினலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மையா மெனி னுலகர்முன் வருகென வுரைப்பார். (௧0௮௭)

கற்பக மீன்ற செவ்விக் காமரு பவளச்சோதிப்
பொற்றிறள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலும்
நற்பதம் பொலிவு காட்ட ஞாலமும் விசும்பு மெல்லாம்
அற்புத மெய்தத் தோன்றி அழகினுக் கணியாய் நின்றாள். (௧௧0௮)

எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவள் குளழிலின் வெள்ள
நண்ணுநாள் முகத்தாற் கண்டான் அவளினு நல்லாள் தன்பால்
புண்ணியப் பதினா றாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ளம் ஆயிர முகத்தாற் கண்டார். (௧௧0௯)

என்பது பெரிய புராணம்.

அடைந்து பூதி சாதனம் விளங்க அடியார்கள்சூழத் திருமணச் சடங்குகள் நடந்து காதலியாரைக் கைப்பிடித்தபடி அக்கினியை வலம் வரும் போது திருநல்லூர்ப் பெருமண மென்னும் திருக் கோயிலில் சோதி தோன்ற, "காதலாகி" என்னும் முதற்குறிப்பை யுடைய பஞ்சாட்சரக் திருப்பதிகம்பாடி அத்திவ்விய சோதியிற் கலந்தருளினர். (*)

என்று பதினெண் புராணங்களையும் சொல்ல வல்லவரும், மாதவத்து நல்பயனுயுமுள்ள சூதமுனிவர் திருவேட்டக்குடிப் புராணமான்மியத்தை நன்ருய்ச் சொல்ல, சௌனகாதி முனிவர் கள் கேட்டுச் சூதமுனிவரைப் பார்த்து தேவரீரது பெருமையை இவ்வளவென்றுசொல்ல முடியுமோ! என்று தோத்திரஞ்செய்து வணங்கிக்கொண்டு தங்கள்தங்கள் தவசாலைகளை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

சுபம் !!!

வாழ்த்துச் செய்யுள்.

மருவேட்ட சாம்புனைமெய் வனப்பருமை வரதர்
முத்தெய் வதங்கள்வாழ்க
உருவேட்ட அயனுதி யும்பரன்ப ரோடருளி
னேங்க நீங்கா
இருவேட்ட வினையகலத் திருப்பணிகள் புரிதொண்டர்
இலங்க மேவும்
திருவேட்டக் குடிவிளங்க செப்பருஞ்சீர்ப்
புராணநூல் சிறக்க மாதோ.

(*) காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளித்
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாதன்எழில் வளர்சோதி நண்ணியத னுட்புகுவார்
போதநிலை முடிந்தவழி புக்கொன்றி யுடனுனர். (கஉருரு)
இது பெரிய புராணம்.

வேறு.

சீர்திரு வேட்டக் குடிநகர் வாழ்க திருமேனி
பழகர்தங் கோயில்
பார்தனி லோங்க திருப்பணி ஆற்றும் பத்திமான்
நீடூழி வாழ்க
ஏர்தனிச் சைவ நன்னெறி உலகில் என்றுமே
நிலைத்தினி தோங்க
பேர்மலி தெய்வத் தமிழ்மறை வாழ்க பிறங்கிடும்
அடியர்வா ழியவே.

வேறு.

வாழ்க இப்புரா ணம்நிதம் வாசிப்போர்
வாழ்க என்றுமிப் புராணம் கேட்பவர்
வாழ்க திருவேட்டக் குடியின் வாழ்பவர்
வாழ்க வாழ்கஇம் மாநிலம் வாழ்கவே.

திருச்சிற்றம்பலம்.

திருமேனி நாதன் சேவடி வெல்க.
சாந்த நாயகி தாண்மலர் வாழ்க.

சுபமஸ்து !!!

சிவமயம்.

திருவேட்டக்குடிப் புராண வசனம்

கடவுள் வாழ்த்து

அருஞ்சொற் குறிப்புரை.

௧ உருவின்-காயத்தினுலும். ஆய்-ஆராய்கின்ற; அகன்-மனத்தினுலும்; சொல்லின்-வாக்கினுலும்; சருவின்-பிறவியினுல்; ஆய-ஆகிய.

௨ உருவருவம்-சிவலிங்க வடிவம்.

௩ சாம்தம் நாயகர் - இறக்கின்ற தம்முடைய நாயகர்கள். வாணி-சரசுவதி. மா-இலக்குமி. சாந்தம்-மயிற் சாந்து. குழல்-கூந்தல்.

௪ சங்குவளை-சங்குவளையல். சரம்-அசையும்பொருள் அசரம்-அசையாப் பொருள். வளை-வள்ளைப்பூ சைவலம்-பாசி. வளை-மூங்கில். குவளை - நீலோற்பலம்.

௫ வளம் வெற்றி. தொழில்ஐந்தாவன.படைத்தல்,காத்தல்,அழித்தல், மறைத்தல்அருளல்மலர்க்கைமூன்று கழல் இரண்டு இதனை. தோற்றந் துடியதனில் தோயும் திதியமைப்பில், சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமாய், ஊன்று மலர்ப்பதத்தேஉற்றதிரோதம்முத்தி,நான்ற மலர்ப்பதத்தே நாடு; என்னும் உண்மை விளக்கப் பாவான் உணர்க.

௬ சுவணம் - பொன். அங்குஅமலம் - பரிசுத்தம்.

௭ வான் - ஆகாயம். உயிர் மாபந்தம் தனை-ஆன்மா ஆணவமலத்தில் கட்டுண்டிருத்தலை. கல் ஆல்முதல்-கல்லால மரத்தடி.

௮ உகம்-இரண்டு கம் - தலை மஞ்சு-மேகம். கம் - ஆகாயம். கஞ்சுகம்-சட்டை.

௯ மாது அகத்தன்-உமாதேவியை இடப்பக்கத்திலுடையவன். பாதகத்தனை-பாவியாகிய என்னை முண்டகம்-தாமரை.

௧0 அயில் - வேல். அரையன் - இந்திரன். எயில் - மதில்.

௧௧ அந்திவானவன் - செவ்வானம் போன்ற திருமேனியுடையவன்.

௧௨ அகம் - பாவம். இருவோர்-வாதாவிவில்வலன்,தாரகத்துஇயல்-பிரணவப் பொருள். உரைத்தவன்-முருகன். இயல் ஐந்து - ஐந்திலக்கணம்.

௧௩ அத்தி எலும்பு ரகம்-வகை, பூவை-பெண். ஈண்டு திருமயிலைச் சிவநேசச் செட்டியாரின் மகள் பூம்பாவை.

௧௪ கலில் - கல்லில் தள-போட ஒரு நாமம் - ஒப்பற்ற திருவைந்தெழுத்து.

௧௫ கமலை - திருவாரூர். சூது-சூதாடுகருவி துப்பு-பவளம். பூவை-பரவை நாச்சியார்.

௧௬ வேணி - சடை. கம்-கங்கை. கோவை-திருச்சிற்றம்பலக் கோவை. பாணி-கை.

௧௭ நின்றுன் - இருந்த எச்சதத்தன். கதி-முத்தி. எந்தை-சிவபெருமான்.

௧௮ ஒன்பதிற் றெழுவோர்-அறுபத்துமூவர்

௧௯ கூர் அன்பு - மிக்க அன்பு.

(உம்) சந்தானகுரவர்:— திருக்கைலாய பரம்பரையில் தமிழுலகம் உய்யப்பூமியில் வந்தவதரித்த பெரியார்கள்.

அநாதிமல முத்த பதியாகிய பரமசிவன் தமக்கோர் பிரயோசனமுங் கருதாது அநாதிமல பெத்தராகிய ஆன்மாக்கள் தம்மையுள்ளவாறுணர்ந்து வழிபட்டுய்யும் பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளியவை, வேதம், சிவாகமம் என இரண்டாம். அவற்றுள் வேதத்தின் ஞான காண்டப்பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடாவண்ணம் சமயகுரவர் இனிய செந்தமிழ்ப் பாவினங்களால் தேவாரம் திருவாசகம் என்னும் தோத்திரவாயிலாக விளங்க உரைத்தருளிய சிவாநுபூதிச் செல்வர்கள்.

சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சந்தானகுரவர்கள், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறிவிளக்கம் சங்கற்ப நிராகரணம், என்னும பேர்களையுடைய செந்தமிழ்ப் பாவினங்களால் சாஸ்திர வாயிலாக விளங்க உரைத்தருளிய சிவாநுபூதிச் செல்வர்கள்.

குமரகுருபர சுவாமிகள் கலியுகவரதராகிய செந்திலாண்டவன் திருவருளைப் பாலப்பருவத்தில் பெற்று, ஆண்டில் இளையராயும் அறிவில் முதியராயும் "அச்சிறியபெருந்தகையராய்" விளங்கித் தமிழுலகம் உய்யும் வண்ணம் செய்த அற்புதங்களும், அருணூல்களும் பல. அவற்றுள் முதலில் நிகழ்ந்த அற்புதம்— தாம் ஐந்துவயது வரை ஊமையாயிருந்த காலத்து, செந்தின்மேய முருகப்பெருமான் இவரது ஊமையைத் தீர்த்துச் சடாக்ஷர மந்திரோபதேசஞ் செய்தருளியது. அம்மகிமையால் முதல் தளம் சைவசித்தாந்த தத்துவவுண்மையும், இரண்டாந்தளம் கந்தபுராணச்சுருக்கமுஞ் சேர்ந்த திருச்செந்தூர் "கந்தர் கலிவெண்பா"

என்னும் அருணூல் செய்தருளினர். இரண்டாவது மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் செய்து அரங்கேற்றிய காலத்து இவர் அமைத்த "தொடுக்குங்கடவுட் பழம்பாடல்" என்னும் இனிய செந்தமிழ்ப் பாமாலையை மீனாட்சி அம்பாள் குழந்தையாய்ப் போந்து மகிழ்ந்து திருச்செவிமடுத்து, தாமணிந்துள்ள முத்துமாலையை எடுத்துச் சாத்தப்பெற்ற திருவருட் செல்வர்.

சிவஞானமுனிவர் தமிழுலகமுய்யும் பொருட்டு, வடமொழியில் பாணினி முனிவர் செய்த வியாகரண சூத்திரத்துக்குப் பதஞ்சலி மஹாமுனிவர் செய்தருளிய மஹாபாடியம்போல, தென்மொழியில் மெய்கண்டார் செய்தருளிய சிவஞானபோதச் சூத்திரத்துக்கு மஹாபாடியங்கண்டவர் மாதவச் சிவஞான முனிவராகும். இம்முனிபுங்கவர் கூறும் அகச்சான்றாகிய நூல், உரைகளாலும், இவரது சரித்திரங்கூறும் புறச்சான்று நூல் உரைகளாலும் இவர் மகிமை நன்கு விளங்கும்.

ஆறுமுகநாவல சுவாமிகள் தமிழுலகம் உய்யும் வண்ணம் வேதசிவாகமப் பொருள்களைச் சமயகுரவர், சந்தானகுரவர், திருவள்ளுவர் முதலியோர் தேவார, திருவாசக, சித்தாந்த சாஸ்திர நீதிநூல்களாய்ச் செய்த பொதுநூல் சிறப்பு நூல்களை, நன்குணர்ந்து மக்கள் அறிவுக்கேற்றவாறு சிறிய, பெரிய நூல்களைச் செய்து உலகத்துக்குச் செந்நெறியாகிய நன்னெறி காட்டியருளி உலகம்போற்ற நின்ற புண்ணிய சீலராவர்.

அம்பலவாண நாவலசுவாமிகள், ஆறுமுகநாவல சுவாமிகளிடம் அன்புபூண்டொழுகி, சற்குரு மணிமாலை என்று ஓர் நூல் செய்து அவர்கள் நடத்திக்காட்டிய செந்நெறியையே பின்பற்றி உலகத்துக்கு உபகரித்து வந்த பெரியார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் சைவாங்கில கலாசாலையும், திருநெல்வேலியில் திருஞானசம்பந்தமூர்த்தி மடாலயமும்

ஸ்தாபித்தவர்கள். பிரமஸ்ரீ அப்பயதீக்ஷிதர் அவர்கள் வடமொழியில் செய்த பிரமதர்க்கஸ்தவம் என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்து செய்யுளும் உரையு நடையுமாய்ச் செய்திருக்கிறார்கள். வடமொழியில் கர்மகாண்டமெனப்படும், அகோர சிவாசாரிய பத்ததி, அதன் விருத்தியாகிய நிர்மலமணி வியாக்கியானம், ஞான காண்டமாகிய பௌஷ்கராகமம், அதன் விருத்தியாகிய உமாபதி சிவாசாரியர் பாடியம் இவ்விரண்டையும் தர்க்கம், வியாகரணங்களில் வல்ல சாஸ்திரிகளையுங்கூட வைத்துக்கொண்டு, பரிசிலனஞ் செய்து தமிழில் விரிவானமுகவுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்திய புண்ணியசீலர். இன்னும் இவர்கள் லோகோபகாரமாய்ச் செய்த நூல்களும் பிரசங்கங்களும் பல. இவர்கள் மகிமை “பெரிய புராணப் பிரசங்க வைபவம்” என்னும் நூலின் வாயிலாக நன்கு விளங்கும். சுபம்!

உ

சிவமயம்.

திருவேட்டக்குடி புராண வசனம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்.
௧	௪	கழலெத்துவாம்	கழலேத்துவாம்
௭	௰	கண்டடு	கண்டு
௰௭	௩௰	மதுரைல்யி	மதுரையில்
௩௧	௰௮	திருப்பூவனம்	திருப்பூவணம்
௩௨	௨௫	குளழிலின்	எழிலின்
௩௩	௰௨	தவசாலைகளை	தவச்சாலைகளை
௸	௸	சாம்புனை	சரம்புனை
௸	௸	அடைந்தார்கன்	அடைந்தார்கள்
௩௭	௨௭	கலகசாலை	கலாசாலை
௩௮	௰௨	நண்கு	நன்கு